ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆம் ஆண்டு நிறைவு 88 மே முதல் 89 மே முடிய

தொகுதி - 10 பகுதி - 6

பங்குனி - 1 14—3—88

சிவ சிவ

நமரங்காள்!

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப உடுத்துண்ப உண்ணு - இடித்திடித்துக்
கட்டுரை கூறில் செவிக்கொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போடு உற்ற பிணம்.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

சூட்டிக்கொள்ளத்தக்க அணிகலன் மலர்மாலைகளைச் சூடியும் பூசிக்கொள்ளத்தக்க சாந்தைப் பூசியும், உடுத்திக்கொள்ளத்தக்க ஆடைகளை உடுத்தும், உண்ணத்தக்க உணவை உண்டும் (ஆனல் அமைச்சன்) வற்புறுத்தும் சொல்லைக் கூறினல் அதனைச் செவியில் ஏற்காமலும் ஏறெடுத்துப் பார்க்காமலும் இருக்கும் அரசன், மூச்சுடன் கூடிய பிணம் எனப்படுவான். (உலகியற் பிணம் மூச்சு ஒழிந்த பிணம்; இவன் மூச்சுடன் கூடிய பிணம். இவன் செயற்பாலது ஒன்றுமில்லை என்றபடி)

ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்,

சிறப்பாசிரியர்கள்

திரு அ. ச. ஞானசம்பந்தன்
திரு. தா. ம. வெள்ளைவாரணம்

ஆசிரியர் குழு :

திரு. மு. அருணசலம்
செந்தமிழ்க் கலாநிதி
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர்
ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை. திரு. சுவாமிநாதன்

உள்ளே :

1 பெருமான் புகழ்
2 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300ஆவது ஆண்டு நிறைவு
3 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளைப் போற்றினேர்
4 ஆலயபூஜைப் படிக்காசுநிதி
5 ஸ்ரீ குமரகுருபரர் நெறி விளக்கம் — 12
6 குமரகுருபரரும் ரேகை சாஸ்திரமும்
7 கேதாரத் திருப்பணி
8 இதமான வாழ்வுக்கு எளியவழிகள்
9 குமரகுருபரர் கண்ட திருவாரூர்
10 சகலகலாவல்லி மாலை
11 மும்மூர்த்திகள் ஒப்பீடு
12 ஞானமிர்தம்

உ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்

"கயிலைமாமுனிவர்"

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

ஜென்ம நட்சத்திரத் திருநாளாகிய பங்குனிப் பரணியையொட்டி அவர்கள் திருவடி மலர்களுக்குச் சூட்டும்

வாழ்த்துப் பாமாலை

இமயந் தொட்டுக் குமரிவரை
ஈடில் பெருமைப் பலதலத்தும்
சமயம் புரக்கும் நல்லறங்கள்
சாலப் பெருக்கும் அருளாள!
அமரும் சிங்கத் தருட்கவியின்
ஆன்ற முந்நூற் றாண்டுவிழாக்
கமழச் செய்யத் திருவுளம்கொள்
கனியே! வாழ்க பல்லாண்டே! 1

அன்னை அருளே எனப்பெருகும்
அமுதக் கங்கைக் கரையமர்ந்த
மன்னும் கேதா ரீஸ்வரரின்
மகிமைக் கோயிற் றிருப்பணியும்
துன்னு பனசைக் கீழ்க்கோட்டந்
திருத்தும் வண்ணத் திருப்பணியும்
முன்னிப் புரியும் கருணைபொழி
முத்தே! வாழ்க பல்லாண்டே! 2

659 12/3/88

அயிலை ஏந்து திருக்கரத்தின்
ஆண்ட வன்றன் அருளாலே
கயிலை தொழுத கவின்துறவே!
காட்சிக் கெளிய மாட்சிமையே!
பெயலை ஒத்த திருக்கரத்துப்
பிறங்கும் கருணை வாரிதியே!
தயவார் காசி வாசியெனும்
தகவே! வாழ்க பல்லாண்டே! 3

கோயிற் பூஜை குன்றுமல்
கொழிக்கத் திட்டம் வைத்தநலத்
தாயிற் சிறந்த தண்ணளியே!
தயவே! தயவின் உள்ளொளியே!
நேயக் கல்விக் கூடங்கள்
நிறையச் செய்யும் நெடும்புகழே!
ஆயற் புதமே! அருந்தமிழே!
அமுதே! வாழ்க பல்லாண்டே! 4

இன்னணம்

செந்தமிழ்க் கலாநிதி
திரு. கா. ம. வேங்கடராமையா,
எம். ஏ.,
செயலர்,
ஸ்ரீ குமரகுருபரர் கல்விக்குழுமம்,
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

செந்தமிழ்ச் செல்வர்,
கல்விக்காவலர்,
வித்துவான், டாக்டர்,
திரு. ம. வே. ஜெயராமன்,
எம். ஏ., டி. லிட்.,
தலைவர்,
ஸ்ரீ குமரகுருபரர் கல்விக்குழுமம்,

கவிதை : ம. வே. பசுபதி.

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்லி யவர்.

பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
"கயிலைமாமுனிவர்"

ஸ்ரீல்ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

இந்திரன் என்ற சொல் அரசன் என்ற பொருள் உடையதாகும். உலகு முழுவதும் உடையானை இந்திரன் எனக்குறிப்பர். தேவருலகு முழுதும் உடையானைத் தேவேந்திரன் என்றும், மண்ணுலகு முழுதும் உடையானை நரேந்திரன் என்றும் குறித்தலைக் கருதவேண்டும்.

உலகங்கள் ஏழு. கயிலாயம், சத்யலோகம், வைகுந்தம் தேவலோகம், கந்தர்வம், பூலோகம், நரகலோகம் என்பன அவை. முப்பெருங்கடவுளரின் மூன்றுலகங்களை அடக்காது வேறு கூறுவதும் உண்டு. இந்த ஏழு உலகங்களுக்கும் தனித்தனியே அதிபர்கள் உள்ளனர்.

ஏழுலகங்களுக்கும் அதிபதி யார்? அவரை எப் பெயரிட்டு அழைக்க வேண்டும்? என்ற வினைக்களுக்கு

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சிதம்பரச் செய்யுட் கோவையுள் விடையருளியுள்ளார்கள்.

" முன்புல கீன்ற முகிழ்முலைக் கன்னியோடு
இன்புறும் யோகி எழுபுவிக்கரசே!

ஏழுலகங்களுக்கும் அதிபதியை 'யோகி' என்று அழைக்கச் சொல்கிறார் ஸ்ரீ சுவாமிகள்.

அரசர்கள் போகிகளே. யோகிகளாக இருக்க முடியாது. எந்த உலகிற்கு அதிபதியோ அந்த உலகின் பெயருடன் இந்திரன் என்ற பெயர் சேர்த்துச் சொல்வார்கள் ஆனால் அரசியை உலகின் பெயர் சேர்க்காமல் இந்திராணி என்றே குறிப்பர். இவ் வழக்குப்பற்றியே இந்திராணி ஒருத்தியே என்ற பௌராணிகமும் தோன்றியிருக்கக்கூடும்.

ஏழுலகுக்கும் அரசன், ஓருலக அரசனின் தன்மைகளிலும் மிக்கானாகவே இருக்க வேண்டும். அவன் யோகியாகவே இருக்க வேண்டும் என்ற நம் அனுமானமும் சரி என்று ஸ்ரீ சுவாமிகள் அருளுகிறார்கள்.

'ஏழுலகுக்கும் அரசன் முகிழ்முலைக் கன்னியோடு இன்புறுகிறான்' என்றார்கள், முகிழ் - மொட்டு. பூவெனப்படுவது பொறிவாழ் பூவேயாகையால் இன்ன மொட்டு எனக் குறிக்காமையால், 'தாமரை மொட்டு' எனப் பொருள் கூறுவர். முகிழ்முலை என்பதை வினைத் தொகையாகக் கொள்ளின் பெதும்பை என்றோ மங்கை என்றோ கணித்துக் கூறமுடியாத பருவத்தினளாய கன்னி என்ற நயப்பொருள் தோன்றும்

கன்னி என்ற சொல் மணமாகாத இளம் பெண்ணைக் குறிக்கும் சொல்லாகும்; மணமாகாத இளம் பெண்ணுடன் ஏழுலகத்து அரசர் இன்புறுகிறாரா? என மடித்துக் கேட்டால் ஸ்ரீ சுவாமிகள் மறுக்கிறார் "இல்லை, அவள் இவ்வாறு இன்புறுவதற்கு முன்பே ஏழுலகங்களையும் ஈன்றவள்' என்கிறார். 'முன்பு உலகு ஈன்ற' என்பதில் எதற்கு முன்பு எனச் சுட்டிக்கூறாமை கவனிக்கத்தக்கது.

ஈன்றவள்' என்றால் கன்னியாக இருக்கமுடியாது! 'இன்புறுகிறவர்' என்றால் யோகியாக இருக்க முடியாது! இவற்றிற்கும் மேலாக, யோகியாக இருந்தால் அரசராக இருக்கமுடியாது! அப்படியென்றால்,

> " முன்புல கீன்ற முகிழ்முலைக் கன்னியோடு
> இன்புறும் யோகி எழுபுவிக் கரசே "

என்ற இச்செய்யுள் பிழையான — முரண்பாடான கருத்துக் களை அறிவிக்கும் செய்யுளா? பிழையான - முரண்பாடான கருத்துக்களை அறிவித்தால் அது செய்யுளாகுமா? எனச் சிந்திக்கவேண்டும். இந்த ஐயங்கள் தீர்தற்கு இதன் கீழுள்ள செய்யுளிலக்கணக் குறிப்பைக் காணவேண்டும்.

" இஃது ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் இன்றி குறள் வெண் செந்துறையோடு மாறுபட்டு வந்த குறள் வெண்டாழிசை." என்பது அச் செய்யுளிலக்கணக் குறிப் பாகும்: விழுமிய பொருள் இன்மைக்கு யாப்புநூலார்,

> " அறுவர்க்கு] கறுவரைப் பெற்றும் கவுந்தி
> மறுவறு பத்தினி போல்வயின் நீரே "

என்ற செய்யுளை உதாரணம் காட்டுவர். பாரதத்துள் குந்தி விசுவாமித்திரன் தந்த மந்திரத்தால் தெய்வங்கள்

பால் உலகியற்படியின்றிப் பெற்ற பிள்ளைகளே 'கர்ணனும் பஞ்சபாண்டவரும். அவருள்ளும் நகுல சகாதேவர் பாண்டுவின் இளையதாரம் அம்மந்திரம் சொன்னபோது உதித்தவர்கள் என்றாலும் அவர்களையும் குந்தியின் மக்களாகவே இச்செய்யுள் வருணிப்பது உபதேசிக்கப்பெற்றவள் குந்திதேவியே என்பதனலாகும். மானுட இயல் கடந்த நிலையில் பிறப்புக்கள் நிகழ்ந்தமையின் 'பத்தினி' என்றது மிகவும் சரியான கருத்தாகும். இவ்வாறு மேலோட்டமாகப் பார்க்கும்போது பிழையாகவும் ஆழ்ந்து சிந்திக்கும்போது சரியாகவும் அமையும் முறைமையையே யாப்புநூலார் விழுமிய பொருள் பெற்றது என்பர். இவ்விடங்களில் விழுமிய என்பதற்குச் சிறந்த எனப்பொருள் கொள்ளக் கூடாது.

'முன்புலகீன்ற' என்ற பாடலிலும் மேற்பொருள் குழப்பம் தருவதாக உள்ளது. பராசக்தியின் மேன்மையும் சிவத்தின் பேராற்றலும், சிவம் சக்தி ஆகியவற்றின் இணைப்புத் தத்துவமும் கூறப்பெற்றது இச்செய்யுள் எனக் காணும்போது அக்குழப்பங்கள் அகலும்.

— *சிவ சிவ.*

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 - ஆவது ஆண்டு நிறைவு

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் பொதுக்குழு அமைப்புக்கூட்டம்

அறிக்கை

பொதுக்குழு அமைப்புக்கூட்டம் 12 - 2 - 88 வெள்ளிக்கிழமை மாலை 6 - 30 மணிக்குச் சைவ சபைத்தலைவர் திரு. S. சைலப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் கலைக்கல்லூரி முதல்வர் திரு. P. வேலப்பபிள்ளை அவர்கள் கலந்து கொண்டார். கூட்டத்திற்குப் பல அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் நாற்பதின்மர் கலந்து கொண்டனர். ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளின் சிறப்புக்கள் பற்றித் திரு. சி. சு. மணி உரையாற்றினர் அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. 300ஆவது ஆண்டு நினைவாக ஸ்டாம்பு வெளியிட மத்திய அரசைக் கேட்டுக்கொள்வது.
2. பல அமைப்புகளிலும் ஆண்டு முழுவதும் தொடர் சொற்பொழிவு, மாதந்தோறும் சொற்பொழிவு, ஆராய்ச்சிக்கட்டுரைகள் படிப்பது, கருத்தரங்கு, பட்டிமன்றம், கவியரங்கம் நடத்துவது என முடிவு எடுக்கப் பெற்றது.
3. நெல்லையில் தோன்றும் பல்கலைக்கழகத்திற்கு ஸ்ரீ குமரகுருபரர் பல்கலைக் கழகம் எனப் பெயர்வைக்க அரசைக்கேட்டுக் கொள்வது.
4. ஸ்ரீ குமரகுருபரர் விழாவை அரசு விழாவாக நடத்த அரசைக் கேட்டுக்கொள்வது
5. சைவப்பெருமக்கள் இல்லத்தில் ஸ்ரீ குமரகுருபரர் பாடல்கள் இருக்க ஏற்பாடு செய்வது.

6. எல்லா மன்றங்களும் சேர்ந்து நெல்லையில் மிகப்பெரிய விழா நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

7. இலவச கண்சிகிச்சை முகாம் நடத்துவது.

கூட்டத்தில் கலந்து கொண்ட மன்றங்கள்

1	சைவநெறிக்கழகம்	விக்ரமசிங்கபுரம்
2	அப்பர் அருட்பணி மன்றம்	பாளை
3	இலக்கியப் பேரவை	நெல்லை
4	அறுபத்து மூவர் மடம்	நெல்லை
5	சிவநெறிக்கழகம்	நெல்லை
6	சேக்கிழார் மன்றம்	நெல்லை
7	இந்து தமிழர்க்கவிஞர் மன்றம்	பாளை
8	திருவுருமாமலைதிருப்புகழ்சபை	மீனாட்சிபுரம்
9	மத்திய நூலக வாசகர் வட்டம்	பாளை
10	திருவள்ளுவர் மடம்	இராசவல்லிபுரம்
11	ஸ்ரீ முப்பிடாதி அம்மன் வழிபாட்டுக்குழு	பாளை
12	சைவப் பேரவை	கோவில்பட்டி
13	சைவசபை	பாளை
14	ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்	நெல்லைச்சந்திப்பு

சைவப்பெரியோர்கள் திரு. வை. ஆறுமுகம் பிள்ளை டாக்டர் C. முருகன் சொ. சுந்தரம்பிள்ளை சிவசுப்பிரமணியபிள்ளை, பேராசிரியர் ஸ்ரீ வை. சிக்கந்தர் பாட்சா முதலியோர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளைப் போற்றினோர்

மு. அருணாசலம், எம். ஏ. திருச்சிற்றம்பலம்.

குமரகுருபரர் தமிழைப் பிற்காலம் முழுமையிலும் எளிமையாகவும் இனிமையாகவும், சொல்நயமும் தொடைநயமும் விளங்குமாறு பாடும்படி புலவர்களைத் தமது கவிதைமூலம் மாற்றியிருக்கிறார். எனினும் அவரைத் தனியே எடுத்து அதிகமான பண்டைப் புலவர்கள் புகழ்ந்ததாகத் தெரியவில்லை. இலக்கிய வரலாற்றில் நான்கு செய்திகள் கிடைக்கின்றன. அவற்றைக் கால முறைப்படி கீழே குறிப்பிடுகிறோம்.

1 தருமபுரம் சிவஞானதேசிகர் :

இவர் தருமபுர ஆதீனத்தில் 10 ஆம் பட்டத்தில் ஆதீன கர்த்தராக விளங்கினார். காலத்தால் இவர் குமரகுருபர சுவாமிகளுக்கு மிகவும் நெருங்கின காலத்தில் வாழ்ந்தவர். குமரகுருபர சுவாமிகள் முத்திப்பேறு 1688. அவருக்கு அருள் செய்தவர் 4 ஆம் பட்டம் மாசிலாமணி தேசிகர். குமரகுருபரர் காலத்திலேயே இவர் முத்தி அடைந்து விட்டார் என்று தெரிகிறது. அதன்பின் ஞானசம்பந்தர், திருஞானசம்பந்தர், திருஅம்பலவர், அழகிய திருச்சிற்றம்பலவர், திருநாவுக்கரசு என்ற ஐந்து தேசிகர் பட்டத்திலிருந்த பிறகு சிவஞானதேசிகர் என்பவர் 10 ஆம் பட்டமாகப் பதவி வகித்திருக்கிறார். இவர் காசிக்கு 1720 இல் சென்றார். இதை ஊன்றி நோக்கினால் சுமார் 1680 — 1720 ஆகிய கால எல்லைக்குள் தான் மேற்குறிப்பிட்ட ஐந்து சந்நிதானங்களும் பதவியிலிருந்து முத்தி பெற்றிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். அதாவது 40 ஆண்டுக்கால எல்லைக்குள் 5 பேர் பதவி வகித்து மறைந்திருக்கிறார்கள். இந்தக்கால எல்லை மிகவும் குறைவு. ஆறுவதாக வருகிறவர் 1720 ஆம் ஆண்டில் பட்டம் ஏற்று உடனேயே காசிக்குப் புறப்பட்டுச் சென்றார் என்று நாம் கருத வேண்டி உள்ளது. இவர் காசியில் உள்ள மூர்த்திகளைத் தரிசித்து ஒவ்வொரு சந்நிதியிலும் ஒரு திருவருட்பா என்ற

தேவாரப்பதிகம் போன்ற, பத்துப்பாடல்கள் கொண்ட பதிகங்கள் பத்துப்பாடியிருக்கிறார். அவற்றுள் கேதார நாதர் கோயிலில் பாடிய திருவருட்பா 10 ஆம் பாடலில் குமரகுருபரரைக் குறிப் பிட்டுப் பாடுகிறார். பாடல் முழுமையும் கீழே தருகிறோம்.

பாசுபதன் அருள்பெறும் வசிட்டமுனி என்கின்ற
பரமசிவ யோகிபணியப்
பரவு கேதாரமென வொரு வாரணசியிற்
பரிவுடன் வந்திருந்தாய்,

தேசுபெறு கமலைவரு ஞானசம் பந்தனருள்
சேர் குமர குருபரனெனுஞ்
சிவானந்த மாமுனிக் கடையாள மருளியுன்
திருக்கோயில் கட்டுவித்தாய்,

ஆசுகவி நின்புகழ்கள் பாட அடியேனையும்
அழைத்துவந் தன்பருடனே
ஆனந்த கானம் அகலாமல் வைத்தனையுன்
அருட்கருணை கூறவெளிதோ,

கீசக மணித்திரள்கள் வீசுதிரை மோதிவரு
கெங்கைநதியின் கரையில்வாழ்
கெங் காதரா, கௌரிபங்காள, காசிவரு
கேதார நாத குருவே.

இப்பாடலில் தருமபுரத்தில் வந்த கமலை ஞானப் பிரகாசர் வழியில் தோன்றிய ஆசாரியருடைய அருளைப் பெற்ற குமரகுருபரன் என்னும் சிவானந்த மாமுனிக்கு அடையாளம் அருளி, இடிந்து போய் மண்மூடி, இருந்த இடம் தெரியாமல் மூடப்பட்டு இருந்த உன்னுடைய திருக்கோயிலை அடையாளம் காட்டி மீண்டும் கட்டுவித்துக் கொண்டாய் என்று கேதார நாதரைத் தேசிகர் பாடுகிறார். இதனோடு இப்பாடலில் பின்னுமொரு சிறப்பு இந்த வாரணசியில் பாசுபதனுகிய பரமேசுவரனுடைய அருளைப் பெற்ற வசிட்டமுனி என்ற பரமசிவயோகி இமயமலையிலுள்ள கேதாரர் ஆலயத்தில் கேதார நாதருடைய 16கலைகளில் ஒன்றை மட்டும் அங்கு நிறுத்தி 15 கலைகளை இங்கே கொண்டு வந்து கேதாரநாதராகப் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தார் என்ற கேதாரநாதர் மகாத்மிய வரலாற்றையும் பாடுவது காணத்தக்கது. இந்தச் சிவஞானதேசிகர் நூல்பாடிய காலம் கி. பி 1720ஐ யொட்டி. இவர் குமரகுருபரசுவாமிகளைப் பெயர் சுட்டியே சொல்கிறார்.

2. சிதம்பரமுனிவர் பாடிய க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ்

சிதம்பரமுனிவர் என்பவர் முருகன் மீது ஒரு புது முறையான சிறப்பான ஒரு பிள்ளைத்தமிழ் பாடியிருக்கிறார். இதில் இவர் "ஒரு நூறுதலம் மேவு குமரகுருவின் தண்டை கிண்கிணி சரணங்கள் புகழும் நம் தமிழ்மாலை" என்று காப்புச் செய்யுளில் குறிப்பிடுகிறார். அதாவது முருக க்ஷேத்திரங்களின் கோவையாக நூறு தலங்களைக் கொண்டு பிள்ளைத் தமிழின் பத்துப்பருவங்களிலும் வரும் பத்துப்பாடல்களாகிய நூறு பாடல்களையும் நூறு தலங்களுக்கும் பொருத்திப் பாடுகிறார் என்பது. இந்த நூறு பாடல்களில் வாரானைப் பருவத்து இறுதிப்பாடலில் முருகனைப் பாடிய கீரன், பொய்யாமொழி, அருணகிரிநாதர், கருவூரார், குவியும் மனமுருச் சிறுபுலவர், பகழிக்கூத்தர், காசி வாழும் சிவானந்த குமரகுருபரமுனி ஆகிய இத்தனை பேருக்கும் கவிசொல் என்று அடி எடுத்துக்கொடுத்தான் புள்ளூரில் வந்த முத்துக்குமரன் என்றுசொல்கிறார். புள்ளூர் என்பது புள்ளிருக்கு வேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயில். இங்கு குமரகுருபரர் வந்த போது அவர் பாடும் பொருட்டு 'பொன் பூத்த குடுமி' என்று முருகன் அடி எடுத்துக்கொடுத்தான் என்பது இவருடைய வரலாற்றில் சொல்லப்பட்டது. இது இந்தத் தலத்துக்குரிய சிறப்புச்செய்தி.

இரண்டாவது, தருமபுரத்துக்குரிய பாடலில் இவர் கூறுகின்ற செய்திகள் இங்குக் கவனிக்கத் தக்கன. வாரானைப்பருவம் 10ஆம் பாடல்,

உம்பர்பணி ஆரூரன் அருளினால் ஆனந்த
ஒளிபெ டிவ மானகுரவன்
ஒருசெந் ிலம்பதியி லுன்னருளி னற்பாடும்
உயர்குமர குருபரமுனிக்கு
அம்புயத் தாள்சென்னி சூட்டினேன் எலிபூனை
அரவுபோத்து குயில்கிளி
அத்துவித மாகவே சத்திநிரு வாணமெனும்
அருள் ஞான தீட்சை செய்தோன்
எம்பவ மகற்றினேன் எண்ணிலா அடியவரை
இன்பவா ரிதியில் வைத்தோன்
எழில்வேள்வி மலையிலோர் அம்மையெங்கே என்று
இயம்பியே திருமுன் நிற்கும்

சம்பந்த னுக்கருள்செ யென்றுவள் ளிக்கருள்செய்
சைவநா யகன்வருகவே
தருமையம் பதிமுருக ஒருநாலு பாதமுந்
தருகுமர குருவருகவே.

இப்பாடலில் தருமபுர ஆசாரியர் ஆரூரனுகிய கமலை ஞானப் பிரகாசருடைய அருளினல் ஆனந்த ஒளி வடிவமான குரவன் என்று குருஞான சம்பந்தரைக் குறிப்பிட்டு, அவர்பின் வந்த ஓர் ஆசாரியர் ஒரு செந்திலம்பதியில் உன் அருளினல் பாடும் உயர் குமரகுருபரமுனிக்கு அம்புயத்தாள் சென்னி சூட்டினேன், என்று குறிப்பிடுகிருர். தருமபுரத்து முருகனைப் போற்றுகின்ற இப்பாடல் இங்கிருந்த சிறப்புடைய செயல்கள் செய்த ஆசாரியரைப் பட்டியலிட்டுச் சொல்கிறது. குமரகுருபரமுனிக்கு அருள் செய்தவர் 4 ஆம் பட்டம் மாசிலாமணிதேசிகர். பின் எலி, பூனை, அரவு, போத்து, குயில், கிளி ஆகிய விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் சத்தியோ நிருவாண தீட்சை செய்தவன் என்பது 9ஆம் பட்டம் திருநாவுக்கரசுதேசிகர் என்பது தருமபுர வரலாறு. எம்பவம் அகற்றினேன் என்பது இந்த நூல் பாடிய ஆசிரியர் தம்மை ஆட்கொண்டு தீட்சைகள் செய்வித்துத் தம்முடைய பிறவி நோயைப் போக்கினவன் என்று சொல்வதால் இந்த நூல் செய்த ஆசிரியர் இதே திருநாவுக்கரசு தேசிகருடைய மாணக்கர் என்று தெரிகிறது. அப்பால் வேள்வி மலையைக் குறிப்பிட்டிருப்பது 6 ஆம் பட்டத்திலிருந்த திருஞானசம்பந்ததேசிக சுவாமிகளைக் குறித்தது. இவர் ஒருசமயம் குற்ருலத்தை அடுத்த வேள்வி மலைக்கு வழிபாட்டுக்குச் சென்ருர். அந்த வேள்விமலை முருகனை அருகில் நின்று இவர் தரிசித்த காலை கருவறைக்குள் ஒளி சரியாக விழாமையால் முருகன் வலப்புறம் இருந்த வள்ளி நாயகியாருடைய திருமேனி இவர் கண்ணுக்குப் புலனுக வில்லை அச்சமயம் இந்தக்குருநாதர் இயல்பாகவே தம் அருகில் இருந்தவர்களை நோக்கி "இங்கு வள்ளி நாயகி இல்லையோ?" என்று வினவினராம். அப்போது வள்ளி தேவியார், "திருமுன் நிற்கும் (திருஞான) சம்பந்தனுக்கு அருள் செய்" என்று முருகப்பெருமானல் உரைக்கப்பட்டு வள்ளி நாயகி தன் தலையை சற்றுச் சாய்த்து "தாய் இதோ இருக்கிறேன்" என்று இந்தக் குருவுக்குக் காட்சி கொடுத்தாராம். அத்தகைய தருமையம்பதி என்று பாடுகிருர். இப்பாடலில் தருமபுரத்துக்குரிய பல வரலாறுகளுள் சிறப்பாக ஆசாரிய பரம்பரைக்குரிய நான்கு வரலாறுகள், சிறப்பாகச் சொல்லப் படுகின்றன.

இந்த இரண்டு பாடல்களிலும் சொல்லப்பெற்ற பொருளமைதியால் இந்த நூலைப் பாடியவர் என்று வழங்கப்படுகின்ற சிதம்பர

முனிவர் தருமபுர ஆதீனத்தில் 9 ஆம் பட்டத்திலிருந்த திருநாவுக்கரசு தேசிகருடைய மாணக்கர் என்று திட்டமாய்த் தெரிகிறது. எப்படியோ இந்தச் செய்தி வரலாறு எழுதினோர் கண்ணில் படவில்லை

திருநாவுக்கரசு தேசிகர் காலம் 17 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகள் (1690 — 1700)

3 மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய
குமரகுருபரர் சரித்திரம் :

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை திருவாவடுதுறை ஆதீனத்தில் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரால் மகாவித்துவான் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டவர். அவர் குமரகுருபர சுவாமிகள் பாடலில் அளவற்ற ஈடுபாடு உடையவர். அது காரணமாக அவருடைய சரித்திரத்தை 338 பாடல்கள் கொண்ட ஒரு புராணம் போல எழுதியிருக்கிறார். இவ்வாறு எழுதச் செய்தவர் திருப்பனந்தாள் காசிமடத்தின் தலைவராக இருந்த இராமலிங்கத் தம்பிரான். இந்தச் சரித்திரம் இவர் எழுத நேர்ந்த நிலைமையையும் அதன் தன்மையையும் டாக்டர் சாமிநாதையர் அவர்கள் பிள்ளையவர்கள் சரித்திரம் முதல்பாகத்தில் (பக்கம் 335) பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

" திருப்பனந்தாளிலுள்ள ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக இருந்த ஸ்ரீ காசிவாசி இராமலிங்கத் தம்பிரானவர்களுக்கும் இவருக்கும் மிக்க பழக்கம் உண்டு. இவரைக்கொண்டு ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் சரித்திரத்தைக் காப்பியச் சுவைபடச் செய்விக்க வேண்டுமென்றும் அதில் இன்ன இன்ன பாகங்களை இன்ன இன்ன விதமாகப் பாடவேண்டுமென்றும் அவர் வற்புறுத்திச் சொன்னார். இவர் சொல்லியவற்றில் சில இவருக்கு உடன்பாடாக இராவிட்டாலும் மறுத்தற்கஞ்சி அவர் விரும்பியவாறே அந்நூலைச் செய்து நிறைவேற்றினார்' அதில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுடைய இளமைப் பருவ வருணனையும் ஸ்தலயாத்திரையும் திருச்செந்தூராண்டவன் அருளிச் செயலும், பிறவும் மிக நன்றாக அமைக்கப்பெற்றுள்ளன."

இந்நூலிலுள்ள பாடல்களுள் சில வருமாறு :

" சாலெலாம் வெண்டரளஞ்
தலையெலாஞ் செஞ்சாலி
காலெலாங் கருங்குவளை
காவெலாங் கனிச்சாறு

பாலெலாங் கழைக்கரும்பு
பாங்கெலா மிகத்திருந்தி
நூலெலா நனிவிதந்து
நுவல்வளத்த தந்நாடு"

"ஆய்ந்தபுகழ்ப் போர்வையுடை
யத்திருநாட் டினுக்கழகு
தோய்ந்ததிரு முகமென்னத்
துலங்குநக ரொன்றதுதான்
எய்ந்தபெருஞ் சைவர்குழாந்
திருக்கயிலை என்றிசைப்ப
வாய்ந்தவயி ணவர்கடிந்திரு
வைகுண்ட மெனுநகரம்"

"இலையமில் குமர வேள்முன்
வணங்குவார்க் கென்றுந் துன்பம்
இலையடு பகைசற் றேனும்
இலைபடு பிணிநி ரப்பும்
இலையளற் றுழன்று வீழ்தல்
இலைபல பவத்துச் சார்பும்
இலையென விலைவி பூதி
எடுத்தெடுத் துதவல் கண்டார்"

எனினும் இச்சரித்திரம முழுமையும் பொய்யாகவும் பிழையாக வும். எழுதப்பட்டுள்ளது. தம்பிரானுக்கு அஞ்சி மகாவித்துவான் இப்படி பாடினர் என்பது சிறிதும் ஒப்புக்கொள்ள முடியாத செயல்.

4 புலவர் புராணம் :

திருப்புகழ்ச் சுவாமி என்று வழங்கிய தண்டபாணி சுவாமிகள் தம்முடைய புலவர் புராணத்தில் எல்லாபுலவர்களுக்கும் புராணம் பாடியது போல் குமரகுருபர சுவாமிகளுக்கும் ஒரு புராணம் பாடி யிருக்கிறர். அது 42 பாடல்கள் உடையது. இந்தச் சரித்திரம் சம்பிரதாய சரித்திரத்திற்கு மாறுனது.

5 மகாலிங்க ஐயர் பாட்டு ;

ஒருசமயம் சபாபதி முதலியார் தம்காலத்துப் பெரிய தமிழ் வித்துவானயிருந்த மழவை மகாலிங்க ஐயரிடத்து மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அழைத்துக் கொண்டு போய் அறிமுகப் படுத்தி வைத்தார். பிள்ளை தம்முடைய அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழில் ஒரு பாட்டைச் சொல்லவும் மகாலிங்கஐயர் மிகவும் அனுபவித்து மூன்றுமுறை சொல்வித்துக் கேட்டார். கேட்டபின், தாமே பிள்ளையவர்களுடைய கவிதையின் தன்மையைப் பாராட்டி, "பிள்ளைத்தமிழ் பாட வல்லவர்கள் குமரகுருபர சுவாமி கள் பகழிக் கூத்தர் (திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் பாடியவர்) என்ற கருத்து இப்போது பொய்யாகி விட்டது என்று பின்வரும் பாடலைச் சொல்லிப் பாராட்டினராம்.

"தருமைவளர் குமரகுரு முனிவன் கல்வி
சார் பகழிக் கூத்தனெனத் தரணியோர்சொல்
இருவருமே நன்குபிள்ளைத் தமிழைச் செய்தற்
கேற்ற வரென் றிடுமுரைவெந் நிட்டதம்மா
அருமைபெறு காவையகி லாண்ட வல்லி
யம்மை மேல் மேற்படிநற் றமிழை ஆய்ந்து
சுருதிநெறி தவறாத குணன்மீ னாட்சி
சுந்தரமா லன்பினொடு சொல்லும் போதே"

ஆலயபூஜைப் படிக்காசு நிதி

நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

திரு/திருமதி	முன் இருப்பு ரூ 27229—00
உக்கரை கைலாசம்	5—00
துர்க்காகுடில் அப்பு	5—00
வெள்ளகோவில் R. C. சாமிநாதன் செட்டியார்	5—00
மாயவரம் ஞானசுந்தரம் பிள்ளை	25—00
ஸ்ரீவைகுண்டம் ஆறுமுகம் பிள்ளை	25—00
ஆக	ரூ 27294—00
சேங்கனூர் ஸ்ரீ சத்தியகிரீஸ்வரர் ஆலயச் செலவு	64—00
திருந்து தேவன்குடி கற்கடேஸ்வரர் ஆலயச் செலவு	90—00
தலச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு	ரூ 90—00
பாணதுறை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு	75—00
திருவலம்புரம் வலம்புரிநாதர் ஆலயச் செலவு	90—00
ஆக	ரூ 409—00

ஏமாற்றி வாழமுடியுமா ?

நெல்லை சிவமணி புலவர் ம. சிவசம்பு எம். ஏ.,
பாளையங்கோட்டை.

நான் யாரையும் எளிதில் ஏமாற்றி விடுவேன் என்று பெருமை பேசிக்கொண்டார் நண்பர் ஒருவர். அருகில் இருந்த ஒருவர், "சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம் பலரைப் பலகாலம் ஏமாற்ற முடியுமா? மாட்டிக் கொண்டால் அப்பொழுது தெரியும் நிலைமை" என்றார்.

நான் ஒருநாளும் மாட்டிக்கொள்ள மாட்டேன். என் ஏமாற்று வேலையை ஒருவரும் அறிய முடியாது என்றார்.

அருகில் இருந்த பெரியவர் கடகட வென்று வாய் விட்டுச் சிரித்தார். 'ஏன் சிரிக்கிறீர்கள்'' என்று கோபத்துடன் கேட்டார் ஏமாற்றுக்கார நண்பர்.

ஒருவருக்கும் தெரியாது என்கிறீர்களே அதை நினைத்துத்தான் சிரிப்புவந்தது.

பிறர் அறியாதவாறு நீங்கள் செய்த ஏமாற்றை அந்த வஞ்சகத்தை எங்கும் நிறைந்திருக்கும் ஒப்பு உயர்வு இல்லாத ஒருவன் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்பதையே மறந்துவிட்டீர்களே! உயிர்க்கு உயிராய் இருக்கும் இறைவனை மறைத்து ஏதாவது செய்ய முடியுமா? எல்லாவற்றையும் அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். ஏமாற்றிவிட்டோம் என்று கூறும் மதியிலிகாள்! எல்லோரையும் ஏமாற்றிவிட்டோம் எனக்கருதி மகிழ்ந்து விடாதீர்கள் பிறர் அறியாத வாறு நீங்கள் செய்த வஞ்சகச் செயலை எவ்விடத்திலும் நிறைந்திருப்பவனாகிய இறைவன் காண்பான் என்று கருதி அவனுக்கு அஞ்சி உடல் பதறி வாழ்வதே அறிவுடைச் செயலாகும் என்றார் அப்பெரியவர். அப்பெரியவர் வேறு யாரும் இல்லை, நம் குமரகுருபர அடிகளார் தான். பாடலைப் படித்துப் பாருங்கள்.

வஞ்சித்(து) ஒழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின் — வஞ்சித்த
எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல் என்(று) அஞ்சி
அங்கம் குலைவ(து) அறிவு.

நீதிநெறி விளக்கம்—94

ஸ்ரீகுமரகுருபரரும் இரேகை சாஸ்திரமும்*

நெல்லை சிவமணி ம சிவசம்பு எம். ஏ.,

குமரகுருபரர் முருகன் அருள்பெற்ற புலவர். நற்றமிழ்க் கவிஞர், சிறந்த சிவபக்தர், உயர்குணம் நிறைந்தவர். தருமபுர ஆதீன திருக்கூட்டத் தொண்டர் உலகியற் பேரறிஞர். சகலகலாவல்லுநர். இவற்றையெல்லாம் அவர் பாடிய பிரபந்தங்களைப் படிக்கின்ற பொழுது நாம் அறிகிறோம். அவரது தமிழ்ப்பற்றையும், குருபக்தியையும், அடியவர் பக்தியையும் அவரது நூல்கள் நன்கு விளக்குகின்றன. பண்டைக்கால முனிவர்கள் மருத்துவ-சாஸ்திரம் முதலியவற்றை நன்கு தெரிந்திருந்தார்கள். சித்தர்கள் மருத்துவத்தில் தலைசிறந்து விளங்கினார்கள். அதுபோலக் குமரகுருபரரும் சமயதத்துவம், மருத்துவம், இரேகை சாஸ்திரம் முதலியவற்றையும் நன்கு தெரிந்திருந்தார் என்பதை நாம் அவரது நூல் வாயிலாக அறியலாம்.

இவரது இரேகை சாஸ்திர பயிற்சி மீனாட்சியம்மை குறம் படிக்கின்றபொழுது நன்கு புலனாகிறது. குறவஞ்சி,குறம் முதலிய நூல்களில் எல்லாம் குறத்தி தலைவியினது கையைப் பார்த்துப் பொதுவாகக் குறிசொல்வது வழக்கம். தலைவியினது கைகளை அறம் வளர்க்கும் கைகள், செல்வம் சேர்க்கும் கைகள், மக்களை வளர்க்கும் கைகள் என்றிறல்லாம் பொதுவாகப் பாடுவார். ஆனால் மீனாட்சியம்மை குறத்தில் தலைவியினது கையைப் பார்த்த குறத்தி குறிப்பிட்ட சில ரேகைகளைச் சொல்லி, நீ இன்ன பலன்களை அடைவாய் என்கிறாள். சிறந்த ரேகைகள் உள்ளவர்களுக்குக் கண்ணுக்குத் தெரியாத சில இடங்களில் மறு (மச்சம்) இருக்கும். இதையும் குறிப்பிடுகிறாள். இவைகள் எல்லாம் இவரது இரேகை சாஸ்திரப் பயிற்சியை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

குறத்தி தலைவியினுடைய கையைப் பார்க்கிறாள். வியப்படைகிறாள். இதுபோன்ற சிறந்த கை நான் பார்த்ததே இல்லை என்கிறாள். இப்படிப்பட்ட சிறந்த ரேகைகள் எவர்கையிலும் இல்லை என்கிறாள். உனது கையிலுள்ள தனரேகையைப் பார் அது உனக்கு மிகுந்த செல்வத்தைக் கொடுக்கும் என்கிறாள். புத்திரரேகை நன்கு அமைந்திருக்கிறது. மக்கட் செல்வத்திற்குக் குறையே கிடையாது

என்று பாராட்டுகிருள். இதுமட்டுமா, இரேகைகளில் சிறந்தனவாகக் கருதப்படும் சிலரேகைகள் உண்டு. அவை சங்கு ரேகை, சக்கர ரேகை, மச்ச ரேகை, துடி ரேகை முதலியனவாகும். உன் கையில் துடி ரேகை நன்ருக அமைந்திருக்கிறது பார் நீ திண்ணமாக மதுரேசர் செம்பொற் புயத்தில் சேர்வார். நீ விரும்பாவிட்டாலும் இந்த ரேகை மதுரை சொக்கனிடம் சேர்க்கும் என்று கூறுகிருள். தலைவி மகிழ்ந்திருந்தாள். குறத்தி உனது தோளில் ஒரு (மச்சம்) மறு இருக்க வேண்டுமே என்று வினவினள். தோளில் மச்சம் இருப்பதைப் பார்த்தார்கள், வியந்தார்கள். இந்தரேகை இங்கு அமைந்திருந்தால் இன்ன இடத்தில் மறு (மச்சம்) அமைந்திருக்க வேண்டும் என்பது விதியாயிற்றே. கண்டிப்பாக நீ கயற்கண் அம்மையோடு இறைவனிடம் சேர்ந்திருப்பாய் என்று பெருமையுடன் வாழ்த்துகிருள். பாடலைப் பார்ப்போம்.

"அங்கைத் தலத்துத் தனரேகையால் செல்வம் தரும், உனது
செங்கைத் துடிதென்மதுரேசர் செம்பொற்புயத்திற் சேர்க்கும்
இங்கிப்படி புத்திரேகை யெவர்க்குமிலை யிப்படி தோளில்
தங்கும் மறு அங்கயற்கணம்மை தன்னேடு இருக்கத்தரும் அம்மே"

துடி — உடுக்கை ரேகை (தமருகரேகை)

தனரேகை

இந்த ரேகையைச் சூரிய ரேகை என்றும் அதிர்ஷ்ட ரேகை என்றும் மேல் நாட்டார் கூறுவர். இது சந்திரமேட்டில் உற்பத்தியாகி மோதிரவிரலுக்கடியிலுள்ள சூரியமேடு வரை வந்திருக்கும். பெரும்பாலும் இது எல்லோர் கையிலும் இருப்பது அரிது. தனரேகை கையில் இருந்தால் செல்வமும், செல்வாக்கும் இருக்கும். நல்ல புகழ் உண்டாகும். நம் நாட்டு ரேகை சாஸ்திரிகள் சிலர் விதிரேகையையே தனரேகை அல்லது அதிஷ்ட ரேகை என்று கூறுகிருர்கள்

துடிரேகை

கையிலுள்ள கிரகமேடுகளில் சங்குரேகை, சக்கரரேகை குடை ரேகை, துடிரேகை முதலியன தோன்றும். இவைகளுக்குத் தனிப் பலன் உண்டு. சங்குரேகை சங்கு போன்று இருக்கும். சக்கர ரேகை சக்கரம் போன்று இருக்கும். துடி என்ருல் உடுக்கை என்பது பொருள். துடிரேகை என்பது உடுக்கை போன்று அமைந்திருக்கும் ரேகை.

புத்திரரேகை

மக்கட்செல்வத்தை அறிவிப்பது. சந்திரமேட்டின் அருகிலுள்ள சில ரேகைகளைப் பார்த்துச் சொல்லுவார்கள்.

மறு

இது கருப்புப்புள்ளிகளாகத் தேகத்தில் தோன்றும், இவை கண்ணுக்குத் தெரியாத இடங்களில் இருந்தால் யோகம் என்பார்கள் சில மறு [(மச்சம்) தேமல் மாதிரி செம்மை அல்லது கருமையான நிறத்தோடு படர்ந்திருக்கும் இந்த மறுவை மச்சம் என்றும் கூறுவதுண்டு, குமரகுருபரர் தலைவியினது தோளில் மறு அமைந்திருப்பதாகக் கூறுகிறார்.

இவற்றையெல்லாம் பார்க்கின்ற பொழுது குமரகுருபரர் ரேகை சாஸ்திர பயிற்சி உள்ளவர் என்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ? சகலகலை வல்லுனராகிய குமரகுருபர அடிகள் திருவடி போற்றி வணங்குவோம்.

Phone No : 222 "Tel Add. "JEWELLERY"
PT.N. G. S. T. No: 209126. Post Box. No. 14
LNo. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

ஸ்ரீ நடராஜ விலாஸ்
ஜுவல்லரி ஹால்
சிதம்பரம்

மூகவரி

ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்
26, 27, 28, கடைத்தெரு, **சிதம்பரம்**
தென்னார்க்காடு மாவட்டம்—608 001

சொக்கலிங்கம் துணை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அறக்கட்டளைகள்

புரோப்ரைட்டர் அண்டு டிரஸ்டி

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

—————×—————

திருப்பனந்தாள்

ஸ்ரீவீரியம்மன் பங்குனி உத்திரப்பெருவிழா

23—3—88 முதல் 29—3—88 வரை

திருவிழாக் காலங்களில் திருமுறைப்பணி செய்யும்

இசைவாணர்கள்

1) தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்:
திரு T. M. விஸ்வலிங்கம் சபாபதி சகோதரர்கள்
திருவாவடுதுறை.

2) திரு. V. தியாகராஜ ஓதுவார், திருப்பனந்தாள்.

3) திரு. S. சந்திரசேகரன், திருப்பனந்தாள்.

4) சிதம்பரம், திரு. S. A. கோபாலன், வேய்ங்குழல்.

5) தில்லையாடி, திரு. M. R. மாரியப்பன், மிருதங்கம்.

அனைவரும் கண்டு கேட்டு இன்புறுவீர்களாகுக.

ஸ்ரீ காசிமடம் உத்தரவுப்படி
ரிலிஜியஸ் சாரிடீஸ், ஆர். வி. சுப்பிரமணியம்
திருப்பனந்தாள் மானேஜர்.
22—3—88

ஸ்ரீ காசி ஸ்ரீ குமாரசுவாமி மடத்திற்குச் சொந்தமான

அருள்மிகு கௌரியம்பிகை உடனுறை அருள்மிகு கேதாரீஸ்வரர்

திருக்கோயில் திருப்பணி

சொல்லாவது மறையே சொல்லுவது நல்லறமே
இல்லாவது முத்திக்கு ஏதுவாம் இத்தலமே
அல்லார் குழலளவு மாதொருகொன் மனம்வயிரக்
கல்லா இருந்தவா காசிப் பிரானுர்க்கே.

காணும் காணும் நதிகளெல் லாம்புனற் கங்கையே
அங்குளதெய்வம் யாவையும்
தாணு எங்கள் அகிலேசரே மற்றைத்
தலங்கள் யாவும் தடமதிற் காசியே.

— ஸ்ரீ குமரகுருபரர்.

உலகில் உள்ள புண்ணியத் தலங்கள் யாவற்றினும் உயர்ந்தது எனப்போற்றப் பெறுவதும், முத்தித்தலம் என அநாதிகாலம் முதல் கூறப்பெறுவதும், வருணையென்ற ஆற்றுக்கும் அசி என்றஆற்றுக்கும் இடையில் விளங்குவதால் வாரணசி எனப் பெயர் பெறுவதும், வேத ஆகம புராண இதிகாசங்கள் யாவற்றிலும் போற்றித் துதிக்கப்பெறுவதும், புண்ணிய பாரத பூமியின் உத்தர பிரதேசத்தில் விளங்குவதுமாகிய ஸ்ரீ காசி நகரத்தை ஓங்காரம், விஸ்வநாதம், கேதாரம் என முப்பிரிவுகளுடையதாகக் கேதார மகாத்மியம் கூறும். அவற்றுள் தெற்குப் பகுதியாகிய கேதாரத்துள் அருள் ஞானியாகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீ குமாரசுவாமி மடம் அமைத்து அருளாட்சிபுரிந்த காலத்தில் மன்பதைகள் உய்யும் பொருட்டு ஸ்ரீ கேதாரகட்டத்தை

யும், ஸ்ரீ கேதாரீஸ்வரர் திருக்கோயிலையும் கற்றளி செய் தருளினர்கள். இமயத்து எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கேதா ரீஸ்வரரே ஸ்ரீ மாந்தாதா முனிவரின் அன்னதானச் சிறப் பைப் பாராட்டும் வகையில் ஸ்ரீ காசியில் கோயில் கொண் டருளிய திறமும், 61 முறைகள் கேதார யாத்திரை செய்த வசிட்டர் காசியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கேதாரீஸ் வரரை வணங்குவது ஏழுமடங்கு பலன்தரும் என்றறிந்து உய்ந்ததிறமும் புராணங்கள் கூறுவன. பதினாறுகலைகளுள் காசியில் உள்ள ஸ்ரீ கேதாரீஸ்வரர்பால் 15 கலைகளும் இமயத்துள்ள ஸ்ரீ கேதாரீஸ்வரர்பால் ஒரு கலையும் உள்ள தாக ஐதீகம். இவ்வண்ணம் மூர்த்தி தலம் தீர்த்தம் என் னும் முப்பெரும் சிறப்புகளும் நிறைந்த ஸ்ரீ கேதாரீஸ்வரர் திருக்கோயில் ஸ்ரீ குமாரசுவாமி மடத்திற்குச் சொந்தமான தாக விளங்குகிறது. பல்லாயிரக் கணக்கான பக்தர்களால் நாளும் வழிபாடாற்றப் பெறுகிறது. திருவருள் துணை கொண்டு ஸ்ரீ காசி கேதாரகட்டத்து ஸ்ரீ கேதாரீஸ்வரர் திருக்கோயிற்குத் திருப்பணிசெய்து **அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்** செய்விக்க, **ஸ்ரீகாசிமடம் 21ஆவது அதிபர்**

'கயிலைமாமுனிவர்' ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவுளம் பற்றியுள்ளார்கள்.

பக்தர்கள் இப்புண்ணியப் பேற்றில் பங்குகொள்ளும் வண்ணம் பெருமளவில் நன்கொடைகள் வழங்கி நலம் பெறுவார்களாகுக.

அருளாணைப்படி,

N. கிருஷ்ணமூர்த்தி அய்யர்

ஏஜண்டு, ஸ்ரீ குமாரசுவாமி மடம், வாரணசி.

நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி:—

1. மேலாளர், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் 612 504.
2. Agent, Sri Kumaraswamy Mutt, Kedar Ghat, VARANASI—221 001

PRESS & REGISTRATION OF BOOKS ACT.

Registration of Newspapers (Central) Rules. 1956.

FORM IV. See Rule 8. R. No. 33576 / 78

Statement about ownership & other Particulars about 'SRI KUMARAGURUPARAR" (MONTHLY)

1	Place of publication	:	TIRUPPANANDAL,
2	Periodicity of its publication	:	MONTHLY,
3	Printer's Name	:	T. M. VELLAIVARANAM
	Nationality	:	Indian
	Address	:	Sri Kumaraguruparar Achagam, Sri Kasi Mutt Tiruppanandal.
4	Publisher's Name	:	MA. VEA. PASUPATHY
	Nationalty	:	Indian
	Address	:	Sri Kasi Mutt, Tiruppanandal.
5	Editor's Name	:	MA. VEA. PASUPATHY
	Nationaliity	:	Indian
	Address	:	Sri Kasi Mutt, Tiruppanandal
6	Names & addresses of individuals who own the newspaper and Parteners or Shareholders holding more than one percent of the total cepital	:	His Holiness Sri-la-Sri **Kasi vasi Muthukumaraswami Tambiran Swamigal Avl.** Head of Sri Kasi Mutt Tiruppanandal

I, Ma. Vea. Pasupathy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

MA. VEA. PASUPATHY

Date 1—3—88 Signature of publisher.

இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

1 குளவி, எட்டுக்கால்பூச்சி, மற்றும்சிறிய விஷ ஐந்து கொட்டினாலும் கடித்தாலும்

உப்பைக் கொஞ்சம் தண்ணீரில் போட்டுக் கெட்டியாகக் கரைத்துக் கொட்டு அல்லது கடிபட்ட இடத்தில் தடவினால் குணமாகும். சர்க்கரைத் தண்ணீரில் சில துளி உப்புத் தண்ணீர் விட்டு உள்ளுக்குக் கொடுப்பதும் நல்லது.

2 தலைவலி தீர

மிளகாய், மிளகு, செம்மண் ஒரு அளவாக எடுத்துத் தண்ணீர் விட்டு மைபோல் அரைத்துக் கொதிக்க வைத்து இளஞ்சூடாக நெற்றியில் பத்துப்போடத் தலைவலி குணமாகும்.

3 தலைவலி வராமல் இருக்க

மிளகைத் தேவையான அளவு எடுத்துப் பசும்பால் விட்டு அரைத்துத் தலையில் தடவிவைத்திருந்து பிறகு ஸ்நானம் செய்தால் தலைவலி வராது.

4 முகப் பருவுக்கு

பூண்டு கால் பலம், மிளகு கால்பலம், துத்தி இலை ஒருபிடி இவைகளை அரைத்துச் சிற்றாமணக்கு எண்ணெயில் போட்டுக் காய்ச்சி அதைப் பருவுக்குத் தடவினால் குணம் தரும்.

5 வாந்தியை நிறுத்த

சீரகம் கொஞ்சம், அதில் அரைப்பாகம் திப்பிலி, அரைப்பாகம் சுட்ட மயிலிறகுத்தூள் இவைகளைத் தேனில் கலந்து கொடுக்க வாந்தி நிற்கும்.

5 காயத்திற்கு

நெல்லும் மஞ்சளும் சம எடை எடுத்து நன்றாக அரைத்து வைத்துக் கட்டக் காயம் ஆறும்.

7 கக்கு வானுக்கு

பெருங்காயத்தூள் 6 நெல் எடையும் படிக்காரத்தூள் 3 நெல் எடையும் ஒன்றுசேர்த்துத் தேன்விட்டுக் குழைத்து ஒரு நாளைக்கு மூன்றுமுறை கொடுக்கக் கக்குவான் நோய் குணமாகும்.

Dr. N. சடையப்பன் S. M. P.

குமரகுருபரர் கண்ட திருவாரூர்த் திருநகர்

தா. ம. வெள்ளைவாரணம், திருப்பனந்தாள்,

முன்னுரை

திருவாரூர்ப் பெருமானை நோக்கி, "நீர் திருவாரூரைக் கோயிலாக் கொண்ட நாள் எது" என்னும் வினாவை விண்ணப்பிப் பாராய் நாவுக்கரசர் ஒரு பதிகம் பாடியிருக்கிறார்.

"மான்மறிக்கை ஏந்திஓர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ"

"சிலையால்முப் புரிஎரித்த முன்னோ பின்னோ"

"தில்லைமணி திகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே"

இப்படியாகப் பல புராண நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி இவை எல்லாம் நிகழ்வதற்கு முன்போ பின்போ நீர் திருவாரூரைக் கோயிலாகக் கொண்டது என்று அவர் வினவுகிறார். இவ்வினாவின் பாங்கினால், இந்நிகழ்ச்சிகள் எல்லாம் நடப்பதற்கு முன்னமேயே இறைவன் திருவாரூரில் புற்றிடங் கொண்டுவிட்டான் என்பதுதான் நாவுக்கரசரின் உட்கிடை என்பது தெளிவாகிறது.

....

இங்ஙனம் காலம் அறிய ஒண்ணாப் பழமை உடைய திருவாரூக்கு ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் எழுந்தருளித் திருவாரூர் நான்மணிமாலை அருளிச்செய்தார்கள். இந்நூலிலும் மற்றும் சிதம்பர மும்மணிக் கோவை, பண்டார மும்மணிக்கோவை ஆகிய நூல்களிலும் திருவாரூரைப் பற்றிப் பல செய்திகளைச் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்கள். அவை ஈண்டு ஆராயப்படுகின்றன.

ஆரூரின் வளமை

திருவாரூரைச் சுற்றிச் சோலைகளும் வயல்களும் நிறைந்துள்ளன. சோலைகள் தேன் சொட்டும் மலர்களோடு நிறைந்து இருப்பதோடு குளிர்ச்சியையும் தருகின்றன. இங்கே பலா, கமுகு, வாழை முதலிய

மரங்களும் முல்லை முதலிய கொடிகளும் காணப்படுகின்றன. நிலத்தடியில் வேரில் பழுக்கும் பலாக்களும் கூட இங்கே உள்ளன. இச் செய்திகள்,

"தண்டலை உடுத்த ஒண்தமிழ்க் கமலை"

எனவும்,

"மதுவேய் மலர்ப் பொழில் ஆரூர்"

என்வும்,

"பழுக்காய் தூக்கும் பச்சிளங் கமுகில்
செடிபடு முல்லைக் கொடிபடர்ந் தேறி
....
தாற்றிளங் கதலித் தண்டினிற் படர"

எனவும்,

"பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை"

எனவும்,

"மழைக்குலந் தழைப்பத் தழைத்த தீம்பலவின்
வேரிடைப் பழுத்துப் பாரினுட் கிடந்த
முட்புறக் கனிகள் ... "

எனவும் குமரகுருபரர் பாடிய பகுதிகளால் அறியப்பெறுகின்றன.

இங்குள்ள வயல்கள் எப்போதும் நீர் நிறைந்து அள்ளல் கருஞ் சேறுடையனவாய் உள்ளன. நிலமெங்கும் சதுப்புடையதாகி மென் புலமாய் உள்ளன. வயல்களில் கரும்பும் செந்நெல்லும் விளைகின்றன. இச்செய்திகளை,

"நறும்பணை மருதத்து
அந்தண் ஆரூர் .... "

எனவும்,

"மென்பால் மருதத் தண்புனற் கமலை"

எனவும்,

"நன்னீர் வயற் கமலை"

எனவும்,

"அள்ளற் கருஞ்சேற்று அகன்பணைசூழ் ஆரூரர்"

எனவும்,

"கரும்புற்ற செந்நெல் வயற் கமலேசர்"

எனவும் குமரகுருபரர் பாடியிருக்கிறார்.

திருவாரூர்த் திருநகர்:

இவ்வூரில் திருமகள் புற்றிடங்கொண்டாரை வழிபட்டு வரம் பெற்றாள். இவ்வூரிலே என்றும் பொருந்தியிருப்பவள் ஆயினள். அதனால் திரு ஆர் ஊர் (திருவாரூர்) எனப் பெயர் வந்தது. திருமகளுக்குக் கமலை என மற்றொரு பெயர் உண்டு. அது பற்றி இவ்வூர்க்குக் கமலை என்ற பெயரும் உண்டு. இவ்விரு பெயர்களையும்,

"அந்தண் ஆரூர்"
"தேங்குபுகழ் ஆரூர்"
"கமலைக் கடிநகர்"
"தமிழ்க் கமலை"
"தென் கமலை"
"வரமிகு கமலைத் திருநகர்"
"சீர்கெழு கமலைத் திருநகர்"

முதலான சொற்றொடர்களில் வைத்துக் குமர குருபரர் குறிப்பிட்டுள்ளார். மற்றும் இச்சொற்றொடர்களிலிருந்து திருவாரூர் புகழ் மிக்கது; தமிழ் வளமுடையது; செல்வமிக்கது; காவலுடையது என்பனவும் அறியப் பெறும்.

இவ்வூரின் நடுவே திருக்கோவிலும், கோவிலைச் சுற்றி மதில்களும் அதற்கு வெளியே அழகிய வீதிகளும் உள்ளன.

வீதிகள் செல்வம் மிக்க சிறப்புடன் தெய்வீகமும் உடையன. இதனைப் "பொலன் செய்வீதி" எனவும், "திருவனீள் மறுகு" எனவும் வரும் தொடர்கள் அறிவுறுத்துகின்றன.

பூங்கோயில்:

திருக்கோயில், பூமிதேவியின் இருதய பாகமான இடம் ஆகையால் கமலாலயம் என்று வழங்கப்பெறும். கமலம்-இதயத் தாமரை. ஆலயம்-கோயில். கமலாலயம் என்னும் வடசொல் பூங்கோயில் என்னும் தமிழ்த் தொடராலும் அழைக்கப்படும். இவ்விவரங்கள்,

"மண்மகள் இதய கமலத்தும் பொலிதலின் அக்கமலமான மணங்கமழ் பங்கயத் தடஞ்சூழ் கமலை சமலாலயப் பேர் வாய்ந்த தால்" எனவும் "தென்கமலை ஈசனார் பூங்கோயில்" எனவும் வரும் பகுதிகளால் விளக்கமுறும்.

தக்ஷிணமேரு:

வடக்கே பொன்மேருமலை, சிவபெருமான் எழுந்தருளப் பெற்று உயர்ந்து விளங்குதல் போல, முதலாம் இராசராசசோழன் எடுப்பித்த தஞ்சைப் பெரிய கோவிலின் கருவறை விமானமும் உயர்ந்து விளங்கும் சிறப்புடையதுபற்றி அவ்விமானம் தக்ஷிணமேரு என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகிறது. அங்கெழுந்தருளிய இறைவனும் தக்ஷிணமேரு வி ங்கர் எனக்குறிக்கப் படுகிறார்.

அதைப்போலவே திருவாரூர்க் கோயிலும் சிறப்புடைமை பற்றித் "தென்பால் மேருவில் திகழ்பூங் கோயில்" என்று குமரகுருபர சுவாமிகளால் குறிக்கப் பெற்றுள்ளது.

தேவாசிரயன் மண்டபம்:

திருவாரூர்க் கோயிலில் உள்ள ஆயிரக்கால் மண்டபம் தேவாசிரயன் எனக் கூறப்பெறும். தேவ களால் ஆசிரயிக்கப்படுதலால் தேவாசிரயன் எனப் பெயர்பெற்று. (ஆசிரயித்தல் - இருப்புக் கொள்ளுதல்; பற்றிக் கொள்ளப் படுதல், மேவியிருத்தல்) இதனைக் குமரகுருபரர் "தேவாசிரயன் திருக்காவணத்து மேவாநின்ற விண்ணவர் குழாங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

தலச்சிறப்பு:

திருவாரூர் முத்தித் தலங்களில் ஒன்று, "திருவாரூரில் பிறக்க முத்தி; காசியில் இறக்கமுத்தி; சிதம்பரத்தில் தரிசிக்கமுத்தி' என்று கூறும் வசனம் உலகவழக்கிலும் புலவரது செய்யுள் வழக்கிலும் இருக்கிறது. இதனை

"முத்தலத் தலங்களுள் முத்தித் தலமா
இத்தலம் உடைத்தென இசைத்தனர் சிலரே
அறிஞராங் குரைத்த உறுதிக் கட்டுரை
உலகியல் வழக்கும் புலனெறி வழக்கும்என்று
இருவகை வழக்கினும் நிலைபெற்றன்றே; அவற்றுள்
ஆரூர்ப் பிறத்தல் ....
....
காசியில் இறத்தல் ....
....
சிற்றுயிர்க் கிரங்கும் பெரும்பற்றப் புலியூர்
உற்றநின் திருக்கூத்து ஒருகால் நோக்கிப்
பரகதி பெறுவான் "

என்னும் சிதம்பர மும்மணிக்கோவைச் செய்யுளில் குமரகுருபரர் குறிக்கிறார்.

திருவாரூர்ப் பெருமான்மீது ஞானசம்பந்தர் நாவுக்கரசர் சுந்தரர் ஆகிய மூவருமாக 34 பதிகங்கள் பாடியுள்ளனர்; மணிவாசகர் ஒருபதிகம் அருளியிருக்கிறார்; பூந்துருத்திகாடநம்பி திருவிசைப்பா பாடியுள்ளார்; சேரமான் மும்மணிக்கோவை பாடியுள்ளார்; சேக்கிழார் திருநகரச் சிறப்பில்வைத்துச் சிறப்பித்துள்ளார்; அருணகிரியார் திருப்புகழும்மற்றும் தலபுராணமும் உள்ளன. இங்ஙனம் தமிழால் சிறப்புற்ற திருவாரூரைத் "தமிழ்க் கமலை" என்று குமரகுருபரர் பாராட்டுகிறார்.

இறைவனை வழிபடும்போது அருச்சிக்கும் நாண்மலர்களைவிட, துதித்துப் பாடும் சொன்மலர்களையே இறைவன் விரும்புகிறான். திருமால் தாமரைப் பூவுக்குச் சமமான தனது சிறந்த கண் மலரைச் சாத்தியும் கூட இறைவன் தனது திருவடிகளை அவனுக்குக் காட்டவில்லை, ஆனால் சுந்தரர் பாடிய தேவாரப் பதிகங்களான சொன்மலர் மீது காதல் கொண்டு சுந்தரரின் ஏவலை ஏற்றுப் பரவையின் ஊடலைத் தீர்க்கத் திருவடியால் இருமுறை நடந்து சென்றான். இதனால் "ஒண்மலர் சொன்மலர்க்கு ஒவ்வாது" என்று குமரகுருபரர் கூறியுள்ளார்.

சுந்தரர் திருவாரூர்க்கு ஏழுபதிகம் பாடியுள்ளார். அவற்றுள் "அந்தியும் நண்பகலும்" என்னும் பதிகத்தை, அப்பதிகத்தின் இறுதிப் பாடலில் "சொன்மலர்" என்று குறித்துள்ளார். சொன்மலர் என்ற அதே தொடரைக் குமரகுருபரர் எடுத்துச் சுந்தரரின் பாடலைக் குறிக்கக் கையாண்டிருப்பது ஆராய்ந்து மகிழ்தற்கு உரியதாக இருக்கிறது.

சிவபெருமான் சுந்தரர் பொருட்டு இரண்டுமுறை திருவாரூர் வீதியில் நடந்ததை,

"நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
தள்ளாக் காதல் தணித்தற்கு அம்ம
பரவை வாய்தனில் பதமலர் சேப்ப
ஒருகால் அல்ல இருகால் நடந்தும்
எளியரின் எளியர் ஆயினர்"

என்று குமரகுருபரர் குறித்துள்ளார்

தியாகேசராம் விடங்கர் திருமாலின் மார்பின் மீது அமர்ந்திருந்து, அவன் மூச்சை இழுத்து விடும்போதெல்லாம் மார்பகம்

விம்மித் தனிதலுக்கு ஏற்ப அஜபா என்னும் ஆடலை ஆடிவந்தார்' அம் மூர்த்தியைத் திருமாலிடமிருந்து இந்திரன் பெற்று விண்ணுவகில் வைத்து வழிபட்டு வந்தான். தேவாசுரயுத்தம் நடந்தபோது முசுகுந்தன் தேவர்க்கு உதவியாக நின்று அவர்க்கு வெற்றி உண்டாக்கி அதன் பரிசிலாக விடங்கரை இந்திரனிடமிருந்து பெற்றுப் பூவுலகிற்குக் கொண்டுவந்து திருவாரூரில் வைத்து வழிபட்டான். இங்ஙனம் தியாகேசர் ஆரூர்க்கு வந்த வரலாற்றை, திருவாரூர் நான்மணிமாலையின் இறுதிச் செய்யுளில் குமரகுருபரர் தெரிவித்துள்ளார்.

தியாகேசர் ;

திருவாரூர்க் கோயிலில் கருவறையில் விளங்கும் இலிங்கத் திருமேனியைப் புற்றிடங் கொண்டார் எனவும், உற்சவமூர்த்தியைத் தியாகேசர் எனவும் வழங்குவர்.

தியாகேசர் முசுகுந்தனுல் தேவலோகத்திலிருந்து கொண்டு வரப்பெறும் போது அவரை ஒத்ததாய் மற்றும் ஆறு விடங்கர் வடிவங்கள் கொண்டுவரப் பெற்றன. அவை திருவாரூர் முதலாக ஏழு தலங்களில் எழுந்தளுவிக்கப் பட்டன. அவ்வேழுதலமும் சப்த விடங்கத் தலங்கள் எனப்படும். அவற்றுள் தலையாயது திருவாரூர். இங்குள்ள விடங்கர் வீதி விடங்கர், இவரது நடனம் அஜபா நடனம்.

இவரது, திருநாமங்களை "ஆரூரர், ஆரூர்க்குழகனுர், ஆரூர்த் தியாகர், இருந்தாடுவார், கமலேசர், கமலைத்தியாகர், கமலைநாதன், கமலைப்பிரான், கிண்கிணிக் கால் அழகனுர், செல்வத்தியாகர், தியாகர், தியாகேசர், தென்கமலை ஈசன், தேரூர்ந்த செல்வத் தியாகன், வீதி விடங்கன்" எனக் குமரகுருபரர் குறிப்பிடுகிறுர்.

இவருக்கு ஆயிரம் வேலி நிலம் உடைமையாகும் என்றும், இவர் தேரில் செல்லும் போது அடிக்கு ஆயிரம் பொன் அள்ளி வீசப்பட்டது என்றும் கூறப்படும் செய்தியால் இவர் தேரூர்ந்த செல்வத் தியாகர் எனப்படுகிறுர். இவரது காலில் கிண்கிணி என்னும் அணிகலன் அழகு செய்வதால் கிண்கிணிக்கால் அழகர் என்னும் சிறப்புப் பெயர் உடையவரானுர்.

எவன் ஒருவன் தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் பிறர்க்குக் கொடுத்துத் தன்னலமற்றவனுக இருக்கிருனே அவனே தியாகியாவான். தியாகேசர் மண்ணுலகம் முழுவதையும் திருமாலுக்குக் கொடுத்துவிட்டார். தனது நவநிதியங்கள் அனைத்தையும் குபேரனது கையிலே அளித்துவிட்டார். வழிபடும்

அடியார்க்கு (எனக்கு) மோட்சமாகிய வீட்டைஅளித்துவிட்டார். உமா தேவிக்கு தனது உடம்பில் ஒரு பாதியை அளித்து விட்டார். இப் படியாக நிலம் செல்வம் வீடு உடம்பு அனைத்தையும் பிறர்க்குக் கொடுத்து விட்டதால் இவர் தான் தியாகி. தியாகர் என்னும் பெயர் இவருக்குத்தான் முற்றும் பொருந்தும் இக்கருத்தினை,

"வையம் முழுதும் உழுதுண்ண
வல்லார்க் களித்து, நவநிதியும்
கையில் ஒருவற் களித்து, எமக்கே
கதிவீ டளித்து ஓர் கன்னிகைக்கு
மெய்யில் ஒருகூறு அளித்தனரால்
விமலைக் கமலைத் தியாகர் என்பது
ஐயர் இவர்க்கே தகும்; முகமன்
அன்று, புகழும் அன்றுமே."

என்னும் செய்யுளில் வைத்துக் காட்டுகிறார் குமரகுருபரர்.

தியாகேசர் கோலம் :

தியாகேசரது திருக்கோலத்தில் எம்பிரான் வெண்பொடி பூசி வலப்பால் இருக்கிறார். கருமை நிறத்தோடு உமாதேவி இடப்பால் இருக்கிறாள். இவ்விருவர்க்கும் நடுவில் சிவந்த மேனியுடன் குமரன் இருக்கிறார். வெண்பொடியின் நிறத்தால் தியாகர் கங்கை நதியா வர். கருமை நிறத்தால் உமாதேவி யமுனை நதி ஆவார். செம்மை நிறத்தால் குமரன் வாணி நதியாவார். இம்மூவரும் ஒருசேரக் கூடி யிருப்பதால் இதுவும் மூன்று நதிகள் கூடிய திருவேணி சங்கமம் ஆகும். இங்கே நாம் மூழ்கித்திளைப்போம் என்கிறார் குமரகுருபரர். அவர் கூறும் பாடல்:

தன்மேனி வெண்பொடியால் தண்ணளியால் ஆரூரர்
செம்மேனி கங்கைத் திருநதியே - அம்மேனி
மானே யமுனை அந்தவாணியும் குமரன்
தானே குடைவேம் தனித்து.

திரிவேணி சங்கமத்தில் வாணி நதி வந்து கலப்பது கண்ணுக்குப் புலனாவதில்லை. அது போலத் தியாகேசர்க்கும் உமைக்கும் நடுவில் உள்ள குமரனும் கட்புலனாகாமல் ஆடை அணிகளால் மறைக்கப்பட்டிருக்கிறார் என்பதைக் குறிப்பால் உணர்த்திய நயமும் சிந்தனைக்கு விருந்தாகிறது.

தொடரும்

உ
சிவ சிவ

காஞ்சிபுரத்தில் தேவார விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்
கயிலைமாமுனிவர்
ஸ்ரீ ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்
அருளாணையின் வண்ணம் நிகழ்த்தப் பெறுவது.
பிரபவ ஆண்டு பங்குனித்திங்கள் 23-ஆம் நாள்
(4—4—88) திங்கட்கிழமை
காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதசுவாமி

பங்குனி உத்திரப் பெருவிழா

14-ஆம் நாள் விழா

திருமுறைவாணர்கள் :

1 தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்
திரு. T. M. விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள், திருவாவடுதுறை.

2 தேவார இசைமணி, தேவார இசையரசு, கலைமாமணி
திரு. S. முத்துக்கந்தசாமி தேசிகர், திருச்சி.

3 இன்னிசை மாமணி, சங்கீர்த்தனகர தேவார இசைமணி
திரு. S. திருஞானசம்பந்தம், திருமுறைப்பணி, சீர்காழி

4 திரு. இ. எம். வேதாசலம், சென்னை.

5 திரு. ப. இராமச்சந்திரன், நெய்வேலி.

6 திரு. சா. தண்டபாணி தேசிகர், சென்னை.

7 சிதம்பரம், திரு. S. A. கோபாலன், வேய்ங்குழல்.

8 தில்லையாடி, திரு M. R. மாரியப்பன், மிருதங்கம்.

தா. காசிநாதன்,
நிர்வாக அதிகாரி.
எஸ். வெங்கடேசன்,
தக்கார்.

அருளாணையின் வண்ணம்
K Subiramania Iyer B. A.,
" Thiyagaraja Vilasam "
Triplicane P. O.
Madras - 5

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய
சகலகலாவல்லி மாலை

மருத. மு. நாவளவன்.

எடுப்புரை:

பதினேழாம் நூற்றாண்டு தமிழ் பக்தி இலக்கிய வரலாற்றின் பொற்காலம் எனப் போற்றத்தக்கது. இக்கால கட்டத்தில் சைவ சமயச் சான்றோர் பலர் அவதரித்துத் தமிழையும் சமயத்தையும் இரு கண்களாகப் பாவித்து வளர்க்கலாயினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆவார்.

இவர் அருளிய நூல்கள் பதினறும் இலக்கிய வகையான் சிற்றிலக்கியமாக எண்ணத்தக்க சிறப்புடையன எனினும் இன்று முற்றிலும் கிடைப்பன பதினன்கே. சகலகலா வல்லிமாலை யென்னும் சரஸ்வதி ஸ்துதியும் அவற்றுள் ஒன்று. அது "வெள்ளைக் கிழத்தி மாலை" என்றும் வழங்கப்படுதலுண்டு. பத்துக் கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் இயன்றுள்ளது. கலைமகள் சிறப்பினை விளங்க உரைத்து தமக்கு அருளுமாறு வேண்டும் முறையில் அடிகள் இந்நூலை அமைத்துள்ளார். இந்தப் போல் இனிய எளிய நடையில் உள்ள சரஸ்வதி ஸ்தோத்திரம் வேறு இன்மையின் இந்நூல் மிகவும் சிறப்பாகப் போற்றப் படுகிறது.

நூலெழுந்த வரலாறும் பயனும்:

ஒருபோது 'ஆனந்தவனமாகிய காசியிலே குமரகுருபரனர் ஆனந்தமாக வீற்றிருந்தார்.

"ஆனந்த முயிர்களெய்த ஆனந்த வல்லியோடும்
ஆனந்த மகார்களோடும் ஆனந்த வனத்துமேய
ஆனந்த வடிவார்தம்மை ஆனந்த செய்யுள் பாடி
ஆனந்தம் பயப்பப் போற்றி ஆராந் மெய்து நாளில் காசியிலே'

பல அறங்களையுமியற்றுதற்குரிய இடம்பெறுவான், அந்நகர் வேந்தனைப் பார்க்கக் கருதினர். அம்மன்னரது பேச்சு வேறு மொழியிலிருந்தமையால்' அம்மொழி தமக்குக் கைவரும் வண்ண

வெண்கமலச் செல்வியைப் பாடினர், அதனுல் கலைமகள் அடிகட்குத் தனது காட்சியை நல்கி இந்துஸ்தான மொழியை அவர் உள்ளத்தில் பதித்தருளினுள்.

குமரகுருபரரின் தமிழன்பு:

தமிழின்பால் இவருக்கிருந்த அன்பு அளவிடற்கரியது. இறைவன்பால் அன்பையும், அன்பர் தொடர்பையும், துறவு உள்ளத்தையும் வேண்டும் குமரகுருபரர் உலகியற் பொருள்களில் எதனையும் விரும்பவில்லை. ஆயினும் சொல்விற்பனமும், கவிசொல்ல வல்ல நல்வித்தையும் வேண்டுமென்ற வேட்கை மாத்திரம் இவரை விடவில்லை.

இவர் பிரபந்தங்களில் முதலாவதாகிய கந்தர்கலிவெண்பாவில்,

"ஆசுமுத னாற்கவியு மாட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும் - ஓசை
எழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து"

என்று இளமையில் முருகக் கடவுளை வேண்டும் வேண்டுகோளிலும் துறவு பூண்டபின் பாடிய சகலகலா வல்லிமாலையில்,

"நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்"

"பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்"

"பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்காய்"

என்று கலைமகளை வேண்டும் பிரார்த்தனையிலும் இக்கருத்தே வெளிப்படுகிறது.

தெய்வத்தன்மையும், சிவபெருமான் முதலியவர்களால் விரும்பப் பெறும் இயல்பையும் தமிழ்மொழி உடையதென்பதை இவர் அறிந்தவர். அன்றியும் இறைவன் திருவடிக்குப் புரியும் தொண்டுகளில் சொன்மாலை சூட்டுதலும் ஒன்றென்பதையும் உணர்ந்தவர், வாடும் மலர்மாலையிலும் வாடாத பாமாலையே இறைவனுக்கு மிகவும் விருப்பமானது என்கிருர் இவர்.

"ஒண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலும்"

ஆகலின் அத்தமிழறிவைப் பெற்று அவ்வாற்றலினால் ஆசிரியரையும் தெய்வங்களையும் பாராட்டிப்பாடித் திருப்தியடைந்தார். பண்டார மும்மணிக்கோவையில்,

"விரிக்குஞ் சரியைப் பாமாலை சேர்த்து மெய்க்கிரியை
தரிக்கும் படிநின்று சாற்றியதே மற்றென்றண்டமிழைத்
தெரிகின்ற போதருள் செய்தது வேசிவ யோகமுண்மை
பரிக்கின்ற ஞானமொன் றேமாசி லாமணி பாலித்ததே."

என்னும் செய்யுளால் தாம் தமிழ்மாலை சாத்தியது முதலியவற்றைச் சரியை முதலியனவாகவே கருதினாரென்பது தெளிவாகின்றது. இவ்வாறு கவிதை பாடி இறைவன் திருவருள் பெறுதல் எளிதென்பது இவருடைய கொள்கை.

"எங்கவிதைகொண் டாட்கொண்ட காசிநாதர்" என்னும் காசிக்கலம்பகச் செய்யுளில், அன்பினால் மனமுருகி இயற்றும் கவிதை திருவருளைக் கூட்டும் கருவி என்பதை உய்த்துணர வைத்தார். தமிழ்ப் பாமாலைகொண்டு இறைவனைப் போற்றும் திருப்பணியை இவர் குறைவறச் செய்தமையால் இவருக்குச் சிந்தையின் நிறைவு அமைந்தது. அதனால்,

"செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
வாழிநெடு மனனு மணிநா வும்மே"

என்று தம் மனத்தையும் நாவையும் பாராட்டிக் கொள்கின்றார்.

இங்ஙனம் தம்மனத்தையும் நாவையும் வாழ்த்திக் கொள்ளும் செயல் இவர் நெஞ்சத்தில் நிரம்பியுள்ள உவகையினால் வந்த பெருமிதத்தைக் காட்டுகிறது. இராமபிரான் வந்தனனென்ற செய்தியைப் பரதன் கேட்ட காலத்து அவன் செயல்களை வருணிக்க வந்த கம்பர்,

"வேதியர் தமைத்தொழும் வேந்தரைத் தொழும்
தாதியர் தமைத்தொழும் தன்னைத் தான்தொழும்"

என்று கூறுகின்றார். அவருடைய உவகை தன்னைத்தான் தொழும் செய்கையில் உச்சநிலை பெற்று நிற்கின்றது. அங்ஙனமே தாம் பெற்ற தமிழ்ப் புலமையை நல்லார் இனுய்த்துப் பாமாலை சூட்டி நின்றதனைப் பெற்ற உவகை தம் மனத்தையும் நாவையும் வாழ்த்தும் போது உச்சநிலையில் நிற்பதாயிற்று.

தமிழினிடத்தே இப்புலவர் தெய்வத் தன்மையைக் கண்டனர் அதனைத் தெய்வத்தமிழ் என்று பாராட்டுகின்றனர். தாம் பாராட்டும் தெய்வங்களை எல்லாம் தமிழ்த் தொடர்பும் தமிழின்பால் வேட்கையும் உடையவர்களாகக் கூறுகின்றனர்.

கலைமகளிடத்து கொண்ட ஈடுபாடு:

கலைமகள்பால் இவர் பேரன்பு கொண்டவர் என்பது சகல கலாவல்லி மாலை பத்துச் செய்யுள்களால் மட்டுமன்றிப் பின்னைத் தமிழ்களுள் உள்ள இரண்டு செய்யுட்களாலும் அப்பிராட்டியை நாவாரத் துதித்துப் புகழ்வதோடு வேறிடங்களிற் சார்த்து வகையாலும் அவள் பெருமையை உணர்த்துகின்றார்.

> "புண்டரிக வீட்டிற் பொலிந்து மதுரச்
> சொற்பொலி பழம்பாடல் சொல்லுகின்
> றவளுநின் சொரூபம்"

என அம்பிகையை நோக்கிக் கூறும் செய்யுளால் கலைமகளைத் தேவியின் அம்சமாகவே இவர் கொண்டனரென்று தெரிய வருகின்றது.

கலைமகள் வெண்டாமரையில் எழுந்தருளியிருத்தலும் பிரமன் நாவில் இருத்தலும், தொண்டர் நாவில் இருத்தலும் அன்பர்களுடைய கண்ணும் கருத்தும் நிறைந்து இலங்குதலும் இவர் செய்யுட்களில் கூறப்படுகின்றன.

அத்தேவியைக் கலைக்கொடி, சொற்கொடி, சொற்கடற் தெள்ளமுது, ஞானப் பிராட்டி என்பர். அவள் ஞானத்தின் தோற்றமென்ன நிற்பவளென்றும், தெளிக்கும் பனுவற் புலவோர் கவி மழை சிந்தக்கண்டு களிக்கும் கலாப மயிலென்றும், நூற்கடலுள் நுண்பொருள் தெரித்து நற்பயன் கொள்ளும் நாமகள் என்றும், கல்விப் பெருஞ் செல்வப் பேறென்றும் பொதுவகையில் கல்விக்குத் தெய்வமாதலை எடுத்துரைத்தும், தமிழொடுந் தொன்முறை தெளிக்கும் கலைக்கொடி, முதுபாடலெழுத மறையோடும் இசைமுத்தமிழ் பாடும் இளமான். வட நூற்கடலுள் தமிழ்ச்செல்வமும் காப்பவளென்று இரு மொழிக்கும் உரிமையுடையளாதலை விளக்கியும்,

> "தெள்ளித் தெளிக்குந் தமிழ்க்கடலி னன்பினைந்
> திணையென வகுத்த விறைநூற்
> தெள்ளமுது கூட்டுணுமோர் வெள்ளோதிமம்"

"மதுர மொழுகுங்
கொழிதமிழ்ப் பனுவற் றுறைப்படியு மடநடைக்
கூந்தலம் பிடி"

என்பவற்றில் தமிழின்பால் தனியுரிமை பூண்டிருத்தலைச் சிறப்பித்தும் செல்கின்றார்.

"நாளினப் பொருட்டெமது நன்னெஞ்செனக்
குடிபுகும் ஞானப் பிராட்டி"

என்பதில் கலைமகள் தம் நெஞ்சிலும்,

"என்னாவி லுறைந்த வெள்ளை
வள்ளக் கமலத்தவள்"

என்பதில் தம் நாவிலும் குடிகொண்டமையைப் புலப்படுத்துகின்றார். இவற்றால் இவர் கலைமகளின் திருவருட்குப் பாத்திரராகி நாவன்மை பெற்றவரென்பதை அறியலாகும். இல்லையெனில் பரமசைவராகிய இவர்,

"விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகலகலா வல்லியே"

என்று கூறுதற்கு நியாயமில்லை.

தமிழும் வடமொழியும்:

தமிழின் நலமுணர்ந்து தமிழ்மாலை புனைந்துவக்கும் குமரகுருபரர் வடமொழிக்குரிய நன்மதிப்பையும் அங்கங்கே வெளிப்படுத்துவதில் தவறவில்லை. சிறப்பாக வேதங்களைப் புலவாறு இவர் பாராட்டிச் செல்கிறார். அவற்றின் பழமையும் தெய்வத் தன்மையும் இன்னிசையும் எழுதாக்கிளவியாதலும் சிவபெருமானுக்குக் குதிரையாதலும், அப்பெருமானது திருவாக்காதலும் பிரமனாற் பாராயணம் செய்யப் பெறுவதும் சொல்லப்படுகின்றன. கலைமகளை,

"துறைத் தமிழொடும் தொன்மறை தெளிக்குங் கலைக்கொடி"
"வடநூற் கடலும் தேக்கும் செந்தமிச் செல்வமும் தொண்டர்
செந்நாவி னின்று காக்கும் கருணைக் கடல்"

என்று துதிப்பர்.

இசை வேட்கை:

இவர் இசை நூற் செய்திகளைப் பலவிடங்களில் எடுத்தாள்கின்றார்.

"பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய் எனச்

சகலகலாவல்லியை வேண்டிக்கொள்ளும் பொழுது பண்ணை முதலிலே வைத்தமை இவருக்கு இசையின்பாலுள்ள ஆர்வத்தைப் புலப் படுத்துகின்றது.

அருள வேண்டல்:

கலைமகள் பாதங்களைத் தாங்க வெண்டாமரைக்கன்றி அடிகளின் வெள்ளை உள்ளத் தண்டாமரைக்குந் தகாது கொல்லோ? வென்ப் பணிந்து வேண்டக் காண்கிறோம். அடிகள் தம் நெஞ்ச மாகிய குளத்தில் கலைமகள் பாதமாகிய தாமரை மலர வேண்டு மென்று இரக்கின்றார். பொருட்சுவையும் சொற்சுவையும் தோய்ந்து விளங்க வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி, என்னும் நாற்கவியும் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நாற்கவியும் பாடும் பணியில் ஈடுபடுத்தியருள வேண்டுகிறார். பண்ணும், பரதமும், கல்வியும், தீஞ்சொற் பனுவலும் நினைத்த பொழுது எளிதில் எய்த நல்க வேண்டுகிறார். பண் என்பது இசைத்தமிழையும் பரதம் என்பது நாடகத் தமிழையும், கல்வி என்பது இயற் தமிழையும் குறித்து நிற்றலும் உணரத்தகும். பாட்டும், பொருளும், பொருட் பயனாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கும் தம்மிடத் தில் கூட்டும்படி கடைக்கண் நல்க வேண்டுகிறார். சொல் விற்பன மாகிய நாவன்மையும் ஒரே சயத்தில் பலவற்றைக் கவனித்தறியும் அவதானமும், கவி சொல்லவல்ல நல்வித்தையும் தந்து அடிமை யாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறார். உலகம் முழுவதையும் வெண் கொற்றக் குடைக்கீழ் ஆளும் நிலையிற் மேம்பட்ட மன்னராயினும் தம் பாடலைக் கண்ட அளவில் பணிந்து நிற்கச் செய்ய வேண்டும் என்று வேண்டுகிறார். இதில் பாதுஷா தமக்குப் பணிய வேண்டு மென்னும் விருப்பத்தைக் குறிப்பித்தனர் என்பது தகும்.

முடிப்புரை:

வெண்டாமரையில் வீற்றிருக்கும் கலைமகள் உலகைப்படைக்கும் பிரமன் சுவைகொள் கரும்பாவாள். பங்கயாசனத்திற்கூடும் பசும் பொற் கொடியென்று மலரில் உள்ள கொடியென்ற நயம் தோன்றச் சிறப்பிக்கின்றார் அடிகள். உளங்கொண்டு தெள்ளித்தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு களிக்கும் கலாபமயில் தொண்டர் தம் செந்நாவில் வீற்றிருந்து வடநூற் கடலையும் தேக் கும் செந்தமிழ்ச் செல்வத்தையும் காப்பவள், செம்பஞ்சுக் குழம்பு அப்பிய இதந்தரும் செய்ய பொற்பாத கமலமுடையவள், வேதம். விண், புவி, புனல், கனல், காற்று ஆகியவற்றிலும் அன்பர் கண்ணிலும், கருத்திலும் நிறைந்திருப்பவள் என்றெல்லாம் கலைமக ளின் எண்ணிறந்த சிறப்பினை இயம்பித்தமிழின் தன்மையை உணர்த் துதலைச் சகலகலாவல்லி மாலையின் மூலம் காண முடிகிறது.

ஸ்ரீ குமரகுருபரர் காட்டும் மும்மூர்த்திகள் ஒப்பீடு

குஞ்சரன்

தொழில் ஒப்பீடு:

நான் முகனும், திருமாலும், உருத்திரனும் ஆகிய இம்மூவரையும் மும்மூர்த்திகள் என்று சொல்வார்கள். இவர்களிலே நான் முகன் என்பவன் படைத்தல் தொழிலைச் செய்கிறவன் என்றும், திருமால் என்பவன் காத்தல் தொழிலைச் செய்கிறவன் என்றும், உருத்திரன் என்பவன் அழித்தல் தொழிலைச் செய்கிறவன் என்றும் சமய சாத்திரங்கள் இம்மூவரையும் அவர்களின் தொழில்களோடு ஒப்பீடு செய்து பேசுகின்றன.

ஆற்றல் ஒப்பீடு

திருமாலும் நான்முகனும் ஒரு சமயம் தங்களுக்குள் "யார் பெரியவர்" என்ற போட்டியில் இறங்கினர். அப்போட்டிக்கு நடுவராக ஓர் இயக்கன் வந்தான். அங்ஙனம் வந்தவன் ஒரு துரும்பைக்கிள்ளிப் போட்டு நெருப்பை எழுவித்து "இதன் அடி முடிகளைக் காண்பவரே பெரியர்" என்று சொல்லி மறைந்து போனான். திருமால், அடியைக் காண்பதாகக் கூறிப் பன்றி உருக் கொண்டு நிலத்தை அகழ்ந்து கீழ்நோக்கிச் சென்முன். நான்முகன் முடியைக் காண்பதாகச் சொல்லி அன்னத்தின் வடிவு கொண்டு விண்ணை ஊடுருவ் மேல்நோக்கிச் சென்முன். இவர்கள் மேலும் மேலும் சென்றும்கூட அடிமுடிகளைக் காணமாட்டாது அயர்ந்து போயினர். பின்னர், "இயக்கனே! நீ எங்குற்றாய்" என்று அலறினர். அப்போது அடிமுடி காணப்படாமல் நெருப்புத்தூணாகஇருந்த இலிங்கத்திலிருந்து "இங்குற்றேன்" என்று சொல்லியவாறு உருத்திரன் தோன்றினன். இவ்வாறு மும்மூர்த்திகளையும் அவர்களது ஆற்றலோடு ஒப்பீடு செய்து பேசுகிறது இலிங்க புராணம்.

நிற ஒப்பீடு:

காஞ்சிபுரத்தில் மாடமாளிகைகள் ஏராளம். அம்மாளிகையிலே சிலவற்றின் உச்சிப்பகுதி பொன்னால் வேயப் பெற்று மஞ்சள் நிறமாகக் காட்சி அளிக்கின்றன. மாளிகையின் கீழ்ப்பகுதியான படிக்கட்டுக்கள் நீலமணிகள் பதிக்கப்பட்டுக் கருமை நிறமாகக் காட்சி அளிக்கின்றன. மாளிகையின் இடைப்பகுதி வைரககற்கள் பதிக்கப்பட்டு வெண்மையாகக் காட்சி அளிக்கின்றன. இத்தகைய மாளிகைகளின் தோற்றம், கருமை நிறமான திருமால் நிலத்தை

அகழ்வதும், மஞ்சள் நிறமான நான்முகன் விண்ணில் பறப்பதும், வெண்ணிறமான நெருப்பிலே உருத்திரன் தோன்றுவதும் போல் இருக்கிறது என்று சேக்கிழார், திருக்குறிப்புத் தொண்டர்புராணத்தில் கூறுகிறார். அதாவது மும்மூர்த்திகளை அவர்களின் நிறத்தோடு ஒப்பீடு செய்து காட்டுகிறார் சேக்கிழார்

உலக நியதி ஒப்பீடு:

வயிறுடைக்க உண்டவனுக்குத் தூக்கம் வருவது உலகியற்கை. பெருஞ் செல்வமுடையவன் தனது சொத்துக்களை எல்லாம் இழக்க நேர்ந்தால் அவனுக்குப் பித்துப்பிடிப்பது உலகியற்கை. அருமையான இலக்கியத்தைப் படைத்த புலவன், தான் படைத்த இலக்கியத்தைத் தானே படித்துப் படித்துச் சுவைப்பதும் உலகியற்கை.

இந்த மூன்றுவித உலகியற்கைகளை — உலக நியதிகளை — மும்மூர்த்திகளோடு இயைத்து ஒப்பிடு செய்கிறார். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

ஏழு உலகங்களையும் காக்க வேண்டிய திருமால் ஒரு சமயம். அவ்வேழு உலங்களையும் உண்டு விடுகின்றான். இப்படிப் பெரும ளவுக்கு உண்டவனுக்கு உறக்கம் வரவேண்டுமல்லவா? அதனால் தான் அவன் திருப்பாற் கடலில் ஆதிசேடனாகிய படுக்கையில் காலை நீட்டி உறங்குகின்றான்.

ஏழு உலகங்களையும் அழித்தல் தொழிலுக்கு உரிய உருத்திரன் ஓர் ஊழிக்கால முடிவில் ஒருசேர அழித்து விடுகிறான். இங்ஙனம் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு (இழந்துவிட்டு) நிற்கும் அவனுக்குப் பித்துப்பிடிக்க வேண்டுமல்லவா? அதனால்தான் அவன் மத்தப் பெரும் பித்தனாகிக் கூத்தாடுகின்றான்.

படைக்கும் தொழிற்கு உரிய நான்முகன் ஏழு உலகையும் படைத்தான், கலைகளைப் படைத்தான்; கலைகட்குத் தெய்வமான கலைமகளையும் படைத்தான். அவளைத் தன் மனைவியாக்கி நாவிலே தங்கும்படி இடங் கொடுக்கிறான். இங்ஙனம் தான் படைத்த படைப்பை — கலைப் படைப்பை — தானே சுவைக்கிறான். அது அவனுக்குக் கரும்பாக இனிக்கிறது

இவ்வாறு மும்மூர்த்திகளையும் உலக நியதிகளோடு ஒப்பீடு செய்து காட்டுகிறார் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

> "சகமேழும் உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக
> உண்டாக்கும் வண்ணம் கண்டான் சுவைகொள் கரும்பே
> சகல கலாவல்லியே"

அனந்த தேவர்

66 மேவின் ஆகம் அனந்தற்கு யாவும்
அறிவொடு படாஅ பொறிபிற புலன்கொளல்
உய்த்கல் செல்லா ஆகலின் அப்புலன்
பொறிகொளப் பிறவால் செறியா எறிகொள்
ஆகம் மாயை யாதலின் அன்றிப்
போகிய நாம விசேடம் எய்தல்
உளதெனில் சிறிது சேய்த்தாய் வளம்மலி
உரைமுதல் விடயம் உணர்வன் விரைவினெடு
என்னின் மற்றவன் ஆகம் பன்னிய
தூய மேனி வினையுடன் ஏயாது
ஆய காலை அவனே பாசம்
உடைத்தனன் ஆதலின் அவனது ஞானம்
தடுக்குநர் யாரே உரகம் உடைத்தயல்
அடுவது தன்னை அடலின்று அதுபோல்
விடும்ஒளி அனந்தனை விரவிய பாசம்
சின்ன மானும் சின்ன உற்பவம்
துன்னிய அதனின் வியோகத் தன்ன
மந்தி ரேசனும் அந்தமில் தான்முதல்
கூடலின் அடம்போல் ஆடியல் ஆகம்
மந்திர வலியின் மருமம் அந்தமில்
கால நீடல் போலவும் ஓடிய
வேண்டிய இவையும் காண்டரு காலம்
கூடினன் ஆயினும் மேனி பீடியல்
ஆண்தகை வலியின் இல்லை மாண்ட
ஆகம் அவனது அமலம் தாதுஅமல்
நளினப் பாசடை ஏய்ப்ப ஒளிய

தந்திர வலியின் எவணம் மைந்தமல்
இரதத்து ஆகம் எவணம் புரைதீர்
போதம் ஏதமில் மேதகு பெருவலி
தீதின்று அறிதிகழ் உறையின் நோயுடல்
முன்செயல் முரஞ்சியது எவ்ண்அவண் எண்கெட
இறைமிடல் அதனிற் குறையிலன் கறையின்
மந்தி ரேசனும் அந்தமில் அமலன்
மைந்தின் மாயை கலக்கி
வெந்திறற் செய்தியின் விரவுவன் விரைந்தே.

இது, தூய வாகனுபினும் அனந்ததேவர்க்குப் படைப்புக் கூடாதென்று வினவ, இவரைச் சகளீகரித்தே அசுத்தாத்துவாக் களைப் பரமசிவன் சத்தியாலே செய்வரென்று கூறியது.

இ - ள் அனந்த தேவர்க்குத் திருமேனி உண்டாயின் சருவ பதார்த்தங்களையும் அறியும் சருவஞ்ஞத்துவம் கூடாது; அஃது எங்ஙனம் என்னில்? பிரகாசத்தைக் கொண்ட மாயாகாரியம் தேகமாதலின், அத்தேகசம்பந்தமான இந்திரியங்கள் அந்நிய விடயங்களை அறிய மாட்டா. அவ்விடயங்களும் தம்மைத் தம் பொறிகளாலேயல்லது பிறவகையால் உணரும் உபாயம் இல்லா தவை யாதலால். அங்ஙனமன்றியே நெடிதாய் உயர்ந்த அனந்த தேவரென்னும் சிவ நாமவிசேடத்தால் அறிதல் உண்டென்று கொள்ளின் சிறிது தூர தரிசனமாய் வளமிகுந்த சத்தம் முதலாக உள்ள விடயங்களை விரைவினில் அறியக் கூடுமல்லது சருவஞ் ஞத்துவம் கூடாது என்பாயாகில்; நீ கேட்கிற அந்த அனந்தே சுரர் திருமேனி சுத்தமாயை யாதலாலே கன்மத்துடன் கூடி யிருக்க மாட்டாது. ஆனபொழுது அவர் பாசச்சேதம் பண்ணின வராதலால் அவருடைய சருவஞ்ஞத்துவத்தைக் கெடுக்கவல்லார் யாரோதான்? பாம்பினிடத்திலே பிறரைக் கொல்லுவதாகிய நஞ்சு கிடந்ததாயினும் அது அப்பாம்பை நலிவதில்லை. அது போலவே, அனந்த தேவர்க்குண்டாகிய பாசமும் அவரை வாதியா திருக் கும், சிந்திலின் உற்பத்தி அற்பமாயினும் ஒன்றோடே பற்றின படியால் அதனை மிகவும் பரிணமித்தாற் போலே மந்திர நாய கரும் முடிவில்லாத சிவசக்தியோடே கூடினபடியால் அசுத்தாத்து வாவுக்குக் கருத்தாவா யிருப்பர்.

கொட்டைப்பாசியானது நீரில் கிடந்தும் அதில் தோய்வற்றுக் கிடப்பது போல, வெற்றியின்ற திருமேனி கொண்டாராயினும் இவர் அதில் நோயிலர். இவரது திருமேனி வலியின்ற பரம சிவனுடைய சத்தியாலே காணத்தக்க காலத்துடனே கூடிய தாயினும் யோகிகள் தேகம் மந்திரசத்தியாலே அளவில்லாத காலம் சென்றிருத்தல்போல அதி தூரமாகிய வேண்டிய காலம் அழியா திருக்கும்; சிவசத்தியோடே கூடும் நிலைமையால் இவரது மாட்சி பெற்ற திருமேனி பரமசிவனது போல மலபந்தம் உடைத் தன்று, தாதையுடைய தாமரையின் நீரில் தோயினும் தோய்வுரு த பசிய இல்லையைப்போல. சிவசத்தியோடே கூடுதலாற் பிரகாச மான வேதாகமங்களைக் கற்றோர்க்கு உண்மை ஞானம் உண்டாவது எவ்விதம்? இரதம் புசித்தோர்க்குச் சரீர சித்திவருவது எவ் விதம்? அவ்விதமே ஒப்பற்ற ஞானமும் குற்றமற்ற மேன்மை தக்கிருக்கப்படா நின்ற பெரிய சத்தியும் உடைமை அனந்த தேவர்க்கு மகத்தான தன்மையில் அமைவது தடையில்லை யென அறிவாயாக, இது நிரல் நிரை. பிரகாசம் உடைத்தாகிய ஔடத சத்தியாலே நோயான உடம்பு முன்பு போலே செயல்வலி பெற்றது எவ்வண்ணமோ? அவ்வண்ணமே பரமசிவனுடைய அள விறந்த சத்தியலே இவர் குறைவிலர் குற்றமில்லாத அந்த அனந்தேசுரரும் முடிவில்லாத பரமசிவனுடைய சத்தியாலே அசுத்த மாயையைக் கலக்கி மிகவலிய பஞ்சகிருத்தியங்களை விரைந்து செய்யாநிற்பர் எ - று.

மற்று, வினைமாற்று, தான், இன் என்பன அசை. உம்மை இசை நிறை, வழியின் என்பது மத்திம தீபம்.

நு. வி: ஔடதசத்தி - மருந்தின் வலிமையால். முரஞ்சியது - வலிமை பெற்றது. மைந்து - வலிமை; சத்தி. சர்வஞ்ஞத்துவம் - முற்றுணர்தல். பாசச் சேதம் - மலநீக்கம். சீந்தில் - ஒருவகைக் கொடி.

சிவானுபவம் வாசாரகிதம்

67 யாணர்க் கோங்கின் குவிமுகை எள்ளிப்
பூணகத் தொடுங்கிய முலையும் மான்நிறக்
கயல்மலைப் பன்ன கண்ணும் புயல்எனப்
பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென
ஆகத் தரும்பிய சுணங்கும் பாகுஊத்த

இன்தீங் கிளவியும் நிதம்பமும் ஒன்றிக்
கண்ணும் மனமும் கவற்றப் பண்வர
இரங்குமணி மேகலை இரியச் சுரும்பொடு
வண்டினம் வாய்விட்டு ஆர்ப்பத் தண்டா
நாணும் நிறையும் நடப்பப் பூநெடு
கோதை பரீஇத் தாதுஉகு பொங்கணை
கல்வி விளைந்த காமத் தேறல்
உண்டோர் உணரின் அல்லதை யாவதும்
கொண்டுரை கூடா வாறும் தெண்திரை
அமிழ்து (டு) தீஞ்சொல் இறிழ்பெரும் புலநெடு
பனுவற் பவ்வம் படிந்துண்டு நிமிர்ந்த
இருபெரும் புலனும் ஒருங்கினிது இழந்து
மெய்யுரை பெறாஉம் செவ்வி யாளன்
கனத்திறன் அல்லதை வினைத்திறம் பிறிதோ
பொறைப்பெருங் கவசம் புக்குச் செறுப்பரும்
செயல்தீர் கணைகழல் கட்டி மயலொடு
காமம் நீத்த கயந்தலை கடிதுஊர்ந்து
அச்சம் இன்மையின் துணையின் றுங்கு
வசையில் பேருணர்வு இசைய மள்ளர்
பூமுக ஞானப் புகர்வாள் ஏந்தி
ஐம்புலன் அடக்கி அறுபகை ஓட்டி
இருவினை வீட்டி ஒருவழிக் கொளீஇய
உள்ளமொடு உணர்வுசூழ் ஒடுக்கி
உள்ளுநர் உணர்வது உணர்வின் பாலே.

இஃது, "பசுவுக்கு அமலன் சத்தி ஒழியா நிற்ற வுண்மை யானும் மற்றவர் மந்திரவலியினானும், அந்தமில் கிட்களம்" பெற்ற அறிவனுக்கு அனுபோகம் இன்னபடி இருக்கும் என்று சொல்ல ஒண்ணமைக்குக் காரணம் என்? என்று வினவ, அவ் வனுபவம் அனுபவித்தறியும தல்லது வாசாகிதமெனக் கூறியது.

இடைவெள் புதுமை விளையுடைத்தாகிய கோங்கினது குவிந்த மொட்டை ஒத்து ஆபரணங்களை யருத்திடப்பட்ட முலையும் பிறழ்ச்சியால் கயல்மீனோடு பொருவது போன்ற மானின் நோக்கத்தையுடைய கண்களும் மேகமென்னும் படியாகப் பின்னுதல் தங்கிய நெறித்தகூந்தலும் பொன்னின் நிறத்தையுடைய மார்பிலே பரந்த தேமலும் பாகுபோல் இனிதாகிய அழகிய வசனமும் அல்குலும் என்னும் இவையத்தனையும் பொருந்திக் கண்ணும் மனமும் தொழிலிழந்து மயங்கச் சத்திக்கின்ற மணிகளாலான மேகலா ரணமும் நீங்கப் பண்ணுக்குப் பொருந்த பெடையும் வண்டும் வாய்விட்டு ஆரவாரம் பண்ண நீங்காத நாணம் மடம் அச்சம் பயிர்ப்பும் அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடியும் நீங்க ஆபரணங்களும் புட்ப மாலையும் தம்மிற் பின்னிக் கலைந்து சிதைய, புட்பங்களின் தாதுகள் உதிரப்பட்ட உயர்ந்ததாகிய சயனத்திலே போகத்திலுண்டாகிய காமரசம் புசித்தோர் அறியுமதல்லது அவர் தம்மாலும் இன்னபடி இருந்ததென்று கொண்டு சிறிதும் சொல்லவொண்ணாதவாறு போலவும் கடலிலுண்டாகிய அமிழ்து போன்ற இனிய வசனத்தைச் சொல்லும் வாக்காகிய பெரிய புலனும் அழகிய சாத்திரங்களாகிய சமுத்திரத்திலே மூழ்கி அவையிற்றைப் புசித்துக் தலைமை பெறும் சோத்திரமாகிய புலனும் என்ற இரண்டு பெரிய புலன்களும் ஒக்கவே அழகிதாக இழந்து பரிசத்தாலே அறிவிக்க அறியும் ஊமன் காணும் கனப் போல்வதல்லது செலிக்க வொண்ணாத சிவபோகம் இன்னபடியிருந்ததென்று கேட்கவும் சொல்லவும் கூடிய கூறுபாட்டையுடையதோ? அன்று வேறுபட்டது காண். குற்றமில்லாததாகிய பெரிய உண்மை ஞானத்தையுடைய கீர்த்திமான்களாகிய வீரரானவர்கள் பொறுத்தற்கரிய வெகுளியும் துன்பமும் வந்தால் சகிக்கும் பொறுமையாகிய பெரிய கவசத்தையிட்டு விரோதிகளால் சயித்தற்கரிதாகிய தம்மால் பிறர்க்கும் பிறரால் தமக்கும் ஒருசெயல் இல்லை என்னும் சத்திக்கின்ற வீரக்கழலை வீக்கிக் காமமயக்கங்களை ஒழித்தல் என்னும் யானையைக் கடிதாக மேல்கொண்டு சருவசங்க நிவிர்த்தி வந்து நிர்ப்பயமானபடியால் துணையின்றித் தமியராய் அவ்விடத்தே ஞானமென்னும் கூர்மையும் ஒளியுமுடைத்தாகிய வாளையெடுத்துக் கொண்டு பஞ்சேந்திரியங்களையும் தம் வசமாக்கிக் காமாதி பகை ஆறையும் போக்கிப் புண்ணியபாவங்களைச் சயித்துப்

பரமசிவமே பரதத்துவமென்னும் ஒரு நெறிப்பட்ட அறிவொன்றே யல்லாமல் அல்லாத உணர்வுகளைக் கெடுத்து அறிவோர் அறிவின் பாலாய் அறிந்து அனுபவிக்கத் தக்கதாம் எ - று.

ஓ, வினா. ஏ, அசை.

நு. வி: வாசா ரகிதம் - வாக்கினால் சொல்லொணாதது. யாணர் — புதுமை. சோத்திரம் - கண். செயல்தீர்கழல் - யாதொன்றும் செய்யாமையாகிய கழல். கயந்தலை - யானை. காமாதி பகை ஆறு - செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணா உவகை.

அநந்நிய பாவகம்

68 சகளம் கண்காண் தகுதித் தாகத்
துகளில் தியானந் துறவாது அறவ
நிட்களம் கண்காண் தகுதி நீளிடைத்து
உட்க ஓடியது ஓட மிக்க
பாவனை படியாது ஆவகை யரிதெனின்
மேவினை உணர்ந்தனி விமலன் ஓவா
நிலைமையன் குணம்உக நிவந்தோன் நிலன்உரு
அறிவுஅறி யாமை அகன்றோன் பொறிபுனை
யோக வியோகம் ஒழித்தோன் தூமனச்
சங்கற் பத்தொடு சகலம் கலைதீர்பு
எங்கணும் இரிய இருந்தோன் பொங்கிய
மதிஆங் காரம் மடித்தோன் விதியால்
அபாவன் அதனைப் பாவா பாவத்து
உபர்வறு அபாவம் ஒழித்தரும் பாவத்து
உற்றோன் ஏதுக் காலஞ் செற்றோன்
தீண்டல் தீண்டா தாதல் மாண்ட
ஆகம் அணைதல் அகறல் போகோன்

விகற்ப மேவோன் தரிப்பது தவிர்த்தோன்
இச்சை மற்றுஆசி ரயம் செற்ருேன்
எற்றுஇவன் அபாவன் ஆதல் எற்றேல்
கூடான் குறியுடன் அதனுல்
வீடா உலகம் அபாவன் என்றுஅறைவே.

இஃது " உள்ளுநர் உணர்வது உணர்வின் பாலாய்" வசனிக்க ஒண்ணுத அனுபவமாயிருக்கிற நிட்களம் பாவிக்கப் படாததாய் இருந்தது ஏன்? என்று வினவ, அருபி யாதலின் சட்சுவாதி கரணங்களுக்குத் திருசிய னல்லாமையாற் கரணஅறிவு ஒழிய, அருபியாயிருக்கிற ஆன்ம வறிவாலே தரிசிப்பார்க்குத் திருவருளால் அசந்நியமாகப் பாவிக்கப்படுவன் என்று கூறியது.

இ - ள்: தருமவானே! பதிப்பொருள் உருபியாயிருக்குமாயின் கண்ணுற் காணப்படும் முறைமைத் தாதலாலே குற்றமற்ற தியா னத்துக்கு நீங்காதாம் அங்ஙனமின்றி நிட்களமென் றருளிச் செய்தபடியாலே கண்ணுல் தரிசிக்கு முறைமை அதிதூரத்த தாய்ப் பயத்தை யுண்டாக்கிக் கிட்டாததாயிருந்தது கிட்டா தொழி யவே மிகவும்பாவிக்கப் படாத தாகலின் தியானித்தல் அரிதா யிருந்த தென்று சீடன் விண்ணப்பஞ் செய்ய இனி ஆசிரியர் கூறுவார்:

என்பாயாயின் பொருந்த மிகவும் அறிவாயாக: நிமலன் மாறுபாடின்றி என்றும்ஒருபடித்தான நிலைமையுடையோன் முக்குணங் களையும் ஒழித்து ஓங்கினேன். அருபியாயிருப்போன். தனக்கு அபூருவமாக அறிவதோர் அறிவில்லாமையாலே அறிதலில் விருப் பும் சர்வஞ்ஞனை படியினலே அறியாமையுமாகிய இரண்டும் இல்லாதோன். இந்திரியங்களை யுடையார் பதார்த்தங்களிற் கூடி யிருப்பது போலத் தனக்கு அபூருவமாயிருப்பதொரு பொருளில் லாமையினலே ஒரு பதார்த்தத்திற் கூடியிருக்க வேண்டுதலும் தன்னை யொழிய ஒருபொருட்கும் நிலை இல்லாமையால் ஒரு பொருளை ஒழிந்திருத்தலும் இல்லாதோன். தூயதாகிய மனத்தி லுண்டாகிய ஈடணுத் திரயங்களும் சகல கேவலங்களும் தேகமும் யாண்டும் விட்டு நீங்க விளங்கியிருந்தோன். மிக்குற்ற கரணவழி

வாலாகிய அகங்காரம் கெடுத்திருந்தோன். அருபியான் முன்றமை யாலே கரணவறிவாற் பாவிக்கப்படான் ஒருவன். அவனைப் பாவிக்கப்படுவானோ பாவிக்கப்படானோ என்று பார்த்துப் பாவா பாவம் என்றவையிற்றில் தாழ்ந்ததாகிய அபாவமென்னும் அஃது ஒழித்து அவைகளாலே நிச்சயித்துக்கொண்டு கரணரகிதமா யிருத்தலினால் அருபவறிவாலே பாவிக்கப்படுவன் என்று உணர்ந்து அவனை அவ்வளவும் அபேட்சித்துக் கொண்டு அனுட்டிப்போர் பாவனையிலே நின்றோன். தனக்கு மற்றொரு நிமித்த காரணமும் திரிகாலங்களும் இல்லாதோன். ஒரு பொருளினும் பற்றில்லாமை யாலே அதில் தோய்வுடையானும் அல்லன். சருவவியாபியாதலாலே அதனை ஒழிந்திருப்பானும் அல்லன். அழகிய தேகங்களாலுண்டாகிய சுக துக்கம் தனக்கு இல்லாமை யாலே அவையிற்றிற் பந்தமில்லாதோன். அத்தேகங்களுக்குப் பிர விருத்தி நிவிருத்தி தன்னையின்றி அமையாமையால் அவையிற்றை விட்டு இராதோன். அவிகாரியாயிருப்போன் தன்னையொன்றும் தாங்கி நிற்றலை இல்லாதோன். ஒருபொருளின் ஆசையும் ஒருவரை ஆசிரயித்தலும் இவையிரண்டும் கெடுத்தோன். இத்தனைப் பிரகாரத் திலே அறியப்படுவான் ஒருவனைப் பாவிக்கப்படான் என்பது எற்றிற்கோ?

அபாவனென்னும் வசனம் ஏன்தான் உண்டாயிற்று என்னில் அருபியாதலாலே கரணவறிவால் குறிக்கப்படுவானல்லன் அதனால் உலகத்தார் பாவிக்கப்படாதான் என்று சொல்லுதலை ஒழியார் எ - று.

மற்று, அசை. உலகம், ஆகுபெயர். ஐகாரம், சாரியை.வீடா, நீட்டல் விகாரம்.

நு. வி: அநந்நிய பாவகம் - தன்னில். வேறில்லாததாகப் பாவித்தல். நிட்களம் - வடிவில்லாதது. சட்க ஆதி - கண்முதலிய பொறிகள். திருசியன் அல்லாமையால் - புலன் ஆகாதவன். உட்க - அஞ்ச. ஈடணைத் திரயங்கள் - மண், பெண், பொன் என்னும் மூன்று ஆசைகள். பிரவிருத்தி - உண்டாக்குதல். நிவிருத்தி - நீக்குதல். ஆசரயித்தல் - பொருந்தியிருத்தல், பற்றியிருத் தல்.

ஆயுள் சந்தா செலுத்தினல்

ஓர் அன்பளிப்பு

ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினல் ரூ. 55 மதிப்புள்ள

கந்தர் கலிவெண்பா

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய
அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா
பிரபல இசையறிஞர் சேலம்
டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்
இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக
வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத் தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.
அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ 25-ம் அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி இசைத்தட்டைப் பெறலாம்.

ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 12.

ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

ஆயுள் சந்தா	(உள்நாடு)	ரூ 125-00
,,	(வெளிநாடு)	ரூ 225-00
ஆண்டுச்சந்தா	(உள்நாடு)	ரூ 10-00
,,	(ஸ்ரீலங்கா)	ரூ. 13-00
,,	(வெளிநாடு)	ரூ. 15-00

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். "ஸ்ரீகுமரகுருபரர்"
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் தா. ம. வெள்ளைவாரணம்.
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

Posted at Sub-Post Office at Tirupanandal
612504

Licence No. 01. Licensed to Post without Prepayment.

திரு.

ஏ. 67
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெஸண்ட் நகர்,
சென்னை — 600 090.